# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

தீபம் - 68 | Email : theepamlink@gmail.com | TP: 026 2221022 / 026 2054362 | Rs. 30/=




## “எலிசபெத்தைத் தேடிச் சென்ற அன்னை மரியாள் உறவுகளின் பாலமும், பலமுமாவாள்”

### பேராலயப் பெருவிழாவில்
### பேரருட்திரு. கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை

திருகோணமலை மறைமாவட்ட புனித மரியாள் பேராலயத்தின் 127வது வருடாந்த திருவிழாத் திருப்பலியினை தலைமையேற்று ஒப்புக் கொடுத்த மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு.C.நோயல் இம்மானுவேல் ஆண்டகை அவர்கள் தனது மறையுரையில் நற்செய்தி மீள்அறிவிப்பு ஆண்டில் பயணம் செய்யும் எமது திருமலை மறைமாவட்டத்திற்கு அன்னை மரியாளின் வாழ்வு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு என்றார். தன் உறவினளான எலிசபெத்தின் தேவையில் தேடிச் சென்று உறவு பாராட்டி உதவிய மரியன்னை உறவுகளின் பாலமும் பலமுமாவாள் என்றுரைத்த ஆயர் அவர்கள் தற்கால நற்செய்தி மீள் அறிவிப்பின் பலம் உறவுகளை கட்டியெழுப்பும் செயற்பாட்டிலேயே அடங்கியுள்ளது. என்று உறவுகளின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்தார்.

அன்னையின் விண்ணேற்பு பற்றிய 1950ம் ஆண்டு பிரகடணத்தினை நினைவூட்டிய ஆயர் அன்னையின் விண்ணேற்பு ஓர் புதிய உறவின் தொடக்கம் என்றுரைத்ததோடு தூய திருத்துவத்தில் ஒன்றிணையும் விண்ணேற்பிற்கான பயணத்திற்கு அன்னை காட்டும் வழியில் நாமும் வழிநடக்க கூடியிருந்த குருக்கள், நம்பிக்கையாளரிடம் தன் மறையுரை வழியாக அழைப்பு விடுத்தார்.










## “...சிலுவை யூதருக்குத் தடைக்கல்லாகவும் பிற இனத்தாருக்கு மடமையாயும் இருக்கிறது.” (1கொரி 1,23b)

நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவைப் பற்றியே பறைசாற்றுகிறோம் என்று தம்மைச் சுற்றியிருந்தவர்கள் மடமையாகவும், இடறலாகவும் கணிப்பிட்ட சிலுவையைத் தமது பெருமையாகவும், வெற்றியாகவும் அடையாளப்படுத்தும் புனித பவுலை, அவரின் நற்செய்தி அறிவிப்புப் பணியை நாம் திருச்சிலுவையைக் கொண்டாடும் இச்செப்டெம்பர் மாதத்தில் விசேடமாய் நோக்க அழைக்கப்படுகிறோம். திருச்சிலுவை இன்று அனேகரின் அணிகலனாவும், அழகுப் பொருளாகவும் மாறியிருந்தாலும் அது கற்பிக்கும் இறையியலும், வாழ்வியல் சிந்தனையும் எம்மை விட்டு வெகுதூரத்திலேயே இருக்கிறது என்பது வலி நிறைந்த உண்மையாகும். நற்செய்தி மீளறிவிப்பு ஆண்டில் பயணிக்கும் நம் மறைமாவட்டத் திருச்சபைக்கு திருச்சிலுவை மகிமையின் விழா, நம் பணி வாழ்வை, வாழ்வுப் பயணத்தை, நாம் அறிவிக்கும் நற்செய்தியின் சாரத்தை மீட்டிப்பார்க்க அழைப்புவிடுக்கிறது. திருச்சிலுவை மகிமையின் விழாவைக் கொண்டாடும் நாம் சிலுவையைப் பற்றி பெருமைபாராட்டுவதோடு நின்றுவிடாமல் அதன் அழைப்பை வாழ்வதில் பெருமைகொள்வோம்.

## இருதயபுரம் திருஇருதய ஆண்டவர் ஆலயத்திருவிழா



திருகோணமலை இருதயபுரம் பங்கின் திரு இருதய ஆண்டவர் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா 24.07.2020 வெள்ளிக்கிழமையன்று பங்குத்தந்தை H. யூட் ஜோன்சன் அடிகள் தலைமையிலான கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 26.07.2020 அன்று அருட்பணி. S. டக்ளஸ் ஜேம்ஸ் அடிகளார் தலைமையிலான கூட்டுத் திருப்பலியுடன் இனிதே நிறைவு பெற்றது. கொரோனா கால கட்டுப்பாடுகள் காரணமாக நவநாட்கள் 03 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டு மக்கள் ஆரோக்கியத்துடன் பங்கேற்க வழி செய்யப்பட்டது.

## தம்பலகாமம் புனித பாத்திமா அன்னை ஆலயத் திருவிழா - 2020

தம்பலகாமம் புனித பாத்திமா அன்னை ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா 14.08.2020 வெள்ளிக்கிழமை பங்குத் தந்தை அருட்பணி. S.R.ஜெயரட்ணம் அடிகளின் தலைமையிலான கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 16.08.2020 அன்று மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி. T. கிங்ஸ்லி றொபட் அடிகளாரின் தலைமையிலான கூட்டுத்திருப்பலியுடன் இனிதே நிறைவேறியது. திருவிழாவில் கப்பல்துறை, விளாங்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இறைமக்களும் இணைந்து சிறப்பித்தனர்.

## அன்புவழிபுரம் புனித சதாசகாய அன்னை ஆலய வருடாந்த திருவிழா
## தனிப்பங்காக பிரகடனப்படுத்தப்பட்டு முதல் திருவிழா - 2020





பாலையூற்று பங்கிலிருந்து பிரிக்கப்பட்ட அன்புவழிபுரம் தனிப்பங்காக பிரகடனப்படுத்தப்பட்ட பின் தனது முதலாவது திருவிழாவினை 24.07.2020 அன்று பங்குத் தந்தை G. நிதிதாசன் அடிகளார் தலைமையிலான கொடியேற்ற நிகழ்வுடன் தொடங்கியது. விழாவின் சிறப்பு நிகழ்வாக பங்குச் சிறுவர்களுக்கு 01.08.2020 சனிக்கிழமை அன்று மறைமாவட்ட ஆயரால் முதல்நன்மை, உறுதிப்பூசுதல் அருளடையாளங்கள் வழங்கப்பட்டன. 02.08.2020 ஞாயிற்றுக்கிழமை பேரருட்திரு. C. நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையிலான திருவிழா கூட்டுத்திருப்பலி கோலாகலமாக நிறைவேற்றபட்டது. அன்னையின் அருள்வேண்டி பங்குமக்களோடு முன்னாள் தாய்பங்குமக்கள் மற்றும் அயல்பங்கு மக்களும் செபத்தோடு பலியில் பங்கேற்றனர்.

### திருவிழாவையொட்டிய விளையாட்டுக்கள்

- பங்கு இளைஞர் ஒன்றியத்தினரால் மாணவர்கள் மற்றும் பெரியோருக்கான விளையாட்டு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப் பட்டு அனைவரும் மகிழ்வுடன் பங்கேற்றனர்.
- நவநாட்காலங்களில் பல்வேறு பிரிவினருக் குமான பூப்பந்து (Batmitton) சுற்றுப் போட்டி நடாத்தப்பட்டு திருவிழா நிறைவில் பரிசில்கள் வழங்கப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இம்மாத மேற்கோள்கள் புனித அகுஸ்தினாரின் வார்த்தை முத்துக்கள்

# சிலுவையை நிமிர்ந்து பாராயோ...



புரட்டாதி மாதம் 14ம் திகதி கத்தோலிக்க திருவழிபாட்டு நாட்காட்டியிலே எமக்குக் கொடுக்கப்படும் ஓர் அழகான விழா. 'திருச்சிலுவையின் மாட்சி' யின் விழாவாகும். "நம் ஆண்டவராகிய இயேசுக் கிறிஸ்துவின் சிலுவையில்தான் நாம் பெருமை பாராட்ட வேண்டும். அவரிலேதான் நமக்கு மீட்பும் வாழ்வும் உயிர்த்தெழுதலும் உண்டு. அவர் வழியாகவே நாம் மீட்கப்பெற்றோம் விடுதலை அடைந்தோம்" (கலா.6:14). என்ற வருகைப் பல்லவியோடு இவ்வழிபாடு ஆரம்பமாகின்றது. இவ்விழா எமக்கு பல உண்மைகளை தெளிவுபடுத்துகின்றது. ஏழாம் நூற்றாண்டிலிருந்தே கொண்டாடப்பட்டு வருகின்ற இந்த விழா தனித்துவமான சில இறையியல் கருத்துக்களையும் கூறி நிற்கின்றது. கிறிஸ்தவர்களுக்கு சிலுவை தருகின்ற பாடம் என்ன? அதன் சிறப்பம்சம் என்ன? இது பற்றி தொடக்கத்திலிருந்தே சிந்தித்து வந்துள்ளனர்: சிலுவை ஒரு வெற்றியின் சின்னம், அன்பின் சின்னம், பாவத்திலிருந்து மனிதனை விடுவிக்க கொடுக்கப்பட்ட மீட்பின் சின்னம். எல்லாவற்றிகும் மேலாக இது ஓர் ஒப்புரவின் சின்னமாகும். "நீங்கள் தூயோராகவும் மாசற்றோராகவும் குறைச் சொல்லுக்கு ஆளாகாதோராகவும் தம்முன் விளங்குமாறு ஊனுடல் எடுத்த தம் மகனது சாவின் வழியாகக் கடவுள் உங்களைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்" கொலோ.1,22

சிலுவை, வழிபாட்டின் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. நம் வழிபாட்டிலே பல தேவைகளின் போது திருச்சிலுவையைப் பயன்படுத்துகின்றோம். திருப்பலியின் தொடக்கமும் நிறைவும் திருச்சிலுவை அடையாளத்தை அடிப்படையாகக் கொள்கிறது. இரண்டாம் வத்திகான் சங்கம் கூட்டப்படும் முன் திருப்பலி ஒப்புக்கொடுக்கும் முறைமையும் வேறுபட்டிருந்தது. ஆலயத்தின் சுவரோடு காணப்பட்ட திருச்சிலுவையை நோக்கியே குரு பலியை ஒப்புக்கொடுத்தார். இந்த இரணடாம் வத்திக்கான் சங்கத்திற்கு பிறகு பீடம் நடுவிலே கொண்டுவரப்பட்டது. (free standing altar). இதனால் இயேசுவின் திருவுருவைத் தாங்கிய சிலுவை குருவானவருக்குப்பின்னால் காணப்பட்டது. இவ்வாறு திருப்பலியில் ஆழமாக சிந்திக்கும் இயேசுவின் பாஸ்கா மறை உண்மைகளை அந்த சிலுவையை உற்று நோக்கி நிறைவேற்றும் வழக்கம் மாற்றப்பட்டது.

இறைவன் இஸ்ராயேல் மக்களை எகிப்திய அடிமைத்தனத்திலிருந்து மீட்டு வாக்களிக்கப்பட்ட நாட்டிற்கு அழைத்துச் சென்ற செயலானது இஸ்ராயேலின் வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாக காணப்படும் அதேவேளை எமக்கு ஆழமான இறையியலைக் கற்பிக்கின்றது. எகிப்தை ஒரு தீமையின் அடையாளமாகவும், வாக்களிக்கப்பட்ட நாட்டை இறைவனின் ஆசீர் நிறைந்த நாடாகவும் விடுதலைப்பயண நூலின் ஆசிரியர் காண்பிக்கின்றார். நன்மைத்தனத்திலே தீமை குடிகொள்வதில்லை. செங்கடலை கடந்த நிகழ்வில் கூட ஓர் இறையியல் எமக்கு கொடுக்கப்படுகின்றது: தீயவர்கள் தீர்ப்பிடப்பட்டனர், இறைவனின் மக்கள் மீட்கப்பட்டனர், தீயவர்கள் தண்டிக்கப்பட்டனர், இஸ்ராயேல் மக்கள் பாதுகாக்கப்பட்டனர்: இவர்கள் கடந்து சென்றார்கள், எகிப்தியர் மூழ்கடிக்கப்பட்டார்கள். இந்த இறையியல் அனுபவம் சிலுவையின் அனுபவமாகின்றது.

ஏனெனில் மறைபொருளாய் இருந்த இறைவனின் மீட்கும் செயல் சிலுவையில் தான் அதன் உச்சநிலையை அடைகின்றது. தீமையினால் முடங்கிப் போயிருந்த மக்களை மீட்பதற்கான வழியைக் காட்டியது சிலுவை. "தாமே துன்புற்றுப் பகைமையை அழித்தார். சிலுவையின் வழியாக இரு இனத்தவரையும் ஒருடலாக்கிக் கடவுளோடு ஒப்புரவாக்க இப்படிச் செய்தார்". எபே. 2:16.

இன்று திருஅவைக்குத் தேவையான அருள் ஆசீர்கள் அனைத்தும் அந்த சிலுவையில் இருந்து தான் ஊற்றெடுக்கின்றன. சிலுவையில் காணப்பட்ட பலி வாழ்வு, பணி வாழ்வாகின்றது. சிலுவையின்துன்பங்கள்,வலிகள்,கைவிடப்பட்டநிலைகள்,இரத்தம்சிந்தும்நிலை ஏன்மரணம் கூட இன்றைய திருஅவையின் வாழ்வியல் நிலையாகின்றது. அத்தோடு, சிலுவையிலே சொல்லப்பட்ட செபம், திருஅவைக்கு தேவையாகின்றது. அது சுகமளிக்கும் அருமருந்தாகின்றது. சிலுவையில் பலியாகும் இயேசுவின் கண்களோடு ஏழைகளைத் திருஅவை பார்க்க வேண்டும், உணர்வுகளோடு செவிமெடுக்க வேண்டும், காயங்களோடு ஆறுதல்படுத்த வேண்டும், உருகும் இதயம் கொண்டு வாழ வேண்டும். இதனால் தான் சிலுவையை கண்ட ஒரு தொகுதி மனிதர்கள் விலகிச் சென்றனர், ஒதுங்கிச் சென்றனர், வெறுத்தனர், அவமதித்தனர். ஆனாலும் சிலுவை முகம் சுழித்த மனிதரும் தன்னைப் பார்க்க வைத்தது.

சிலுவையை பார்த்தவர்கள் தங்களை அர்ப்பணித்தனர்:

அவர்கள் முன்பே துன்பப்படுவோர் இருந்ததனால் - அவர்கள் துன்பங்களை தாங்கினர்.
வீதிகளில் வாடுவோர், மடிவோர் வாழ்ந்ததனால் - அவர்கள் வீதிகளுக்கு வந்தனர்.
பட்டினியால் வாடுவோரைக் கண்டதால் - தம் உணவைத் தியாகம் பண்ணினர்.
வீடுகளை இழந்தோர் தம் முன் இருந்ததனால் - தங்கள் சௌகரியங்களை தியாகம் பண்ணினர்.
இது தான் சிலுவை தரும் பாடம்.

அருட்பணி. ச.ஜே. சுரேந்திரராஜா அமதி

சிலுவையின் மகிமை எனும் விழாவைக் கொண்டாடும் போது அதனது ஆழமான இறையியல் எமக்கு சவாலைத் தருகின்றது. நாம் கொண்டாடும் இந்த விழாவின் மூலம் நாம் சிலுவையில் அறையப்பட்டிருக்கும் இயேசுவின் கண்களினூடாக இவ்வுலகை ஆழ உற்று நோக்குவோம்.


# திருச்சிலுவைக் கன்னியர் சபையின் பொதுநிலையினரின் அர்ப்பணமும் பணிவாழ்வும்

திருச்சிலுவையின் மகிமையின் திருவிழாவை புரட்டாதி திங்கள் பதினான்காம் நாள் திருஅவையுடன் இணைந்து திருச்சிலுவைக் கன்னியர்கள் (மென்சிங்கன்) உளப்பூரிப்புடன் கொண்டாடுகின்றார்கள். திருச்சிலுவைக் கன்னியர் சபையானது 1844ம் ஆண்டு ஐரோப்பாவிலுள்ள சுவிஸ்லாந்தில் மென்சிங்கனில் உருப்பெற்றது. இச்சபை ஒரு சர்வதேச துறவற சபையாயினும் உலக அரங்கிலே 176 வருடங்களை கடந்தும் மறைந்து விடாமல் பயணிக்கிறது என்றால் இதற்கான காரணம் இந்திய இலங்கை நாடுகளின் ஆழமான விசுவாசமும் இறைவனுக்காகத் தம்மை அர்ப்பணிக்கும் மனநிலையுமே ஆகும். மேற்குலக நாடுகளை ஆக்கிரமித்து வரும் வர்த்தக மோகமும் நவீன தொழில்நுட்ப வளர்ச்சியும் இணையத்தின் ஊடுருவலும் ஒவ்வொரு மனிதனையும் தன் சுயநிலை மறந்து நடமாட வைத்தது மட்டுமன்றி மனித மாண்பு மறுக்கப்பட்டு பணம், பதவி, காமம் என்றும் ஆசைகள் அதிகமாகி தற்பெருமை கொண்டு அலைய வைத்துள்ளது. நமது இலங்கை நாட்டிலும் இந்நிலை தொடராமலிருக்க மனிதம் உயிர் பெற்று வளர்ச்சியடைய செய்வது எம் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும்.

மேலைத்தேச நாடுகளில் துறவற சபைகள் அருகிவரும் நிலையில் கீழைத்தேச நாடுகளிலும் துறவற அழைத்தல்கள் குறைவடைந்து வருகின்றன. இந்நிலை தொடருமானால் எமது எதிர்காலம் துறவிகள் அற்ற திருஅவையை எதிர்கொள்ளலாம். இந்நிலையில் திருச்சிலுவைக் கன்னியர்கள் தம்முடன் இணைந்து செயற்படுவதற்காகவும், திருச்சிலுவையின் ஆன்மீகத்தை வாழவும், தாம் வாழும் சமூகத்தில் இறையரசின் மதிப்பீடுகளை பரப்பவும் பொதுநிலை அங்கத்தவர்களை உருவாக்கி எமது நாட்டில் செயற்பட ஆரம்பித்து விட்டனர். திருச்சிலுவைக் கன்னியரின் பொதுநிலையினர் சபை கன்னியர்களின் ஒத்துழைப்புடன் யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, பதுளை, வெலிமட, புத்தளம் ஆகிய இடங்களில் வியாபித்துள்ளது. இலங்கையில் 1930இல் கால்பதித்த திருச்சிலுவைக் கன்னியர்கள் 90 வருடங்களை நிறைவெய்துகையில் 9 மறைமாவட்டங்களில் தனது கிளைகளைப் பரப்பி பெருவிருட்சமாக நிமிர்ந்து நிற்பது மூவொரு கடவுளின் வல்ல செயலாகும். இதுபோலவே எமது பொதுநிலையினர் சபை அங்கத்தவர்களும் ஊக்கமுடன் இறையரசிற்காக தம்மை அர்ப்பணித்து செயற்பட ஆசிக்கின்றோம்.

**எமது சபையின் பின்னனி :**

17ம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் மன்னர் ஆட்சி முறைமையும் ஏழைகள், பிரபுக்கள் சமூக அமைப்பும் காணப்பட்டதனால் மக்கள் வறுமை, நோய், இயலாமை, கல்வியறிவு இன்மை என்னும் பல துன்பங்களை அனுபவித்து வந்தனர். மக்களிடையே சமய, சமூக அறிவு, நல்லொழுக்கம், பண்பாடு என்பன அருகிப் போயிருந்தன. மன்னரும் பிரபுக்களும் மக்களின் உழைப்பை உறிஞ்சி சுகபோகத்தில் வாழ்ந்தனர். 1789இல் பிரான்சிய நாட்டில் ஏற்பட்ட அரசியல் புரட்சியும் அமெரிக்க நாட்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சியும் ஐரோப்பிய நாடுகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. கத்தோலிக்க மக்களும் குருக்களும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.



இந்த சந்தர்ப்பத்தில் உதித்த வண பிதா தியோடசியஸ், அன்னை பேனடா என்பவர்களினால் திருச்சிலுவை கன்னியர் சபை விதையாக 1844இல் நாட்டப்பட்டது. இவர்கள் காலத்தின் தேவைக்கு ஏற்ப மக்கள் மத்தியில் வாழ்ந்து சமய அறிவு, சமூக மாற்றம், கல்வி மேம்பாடு, ஒழுக்க உயர்வு என்பவற்றில் தக்க மாற்றங்களை ஏற்படுத்தவல்ல இறைஅருளும் திறமையும் தியாகமும் அர்ப்பணிப்பும் கொண்டவர்களாக விளங்கினார்கள். அன்னை பேனடா எமது சபையின் முதல்வராக பொறுப்பேற்ற கணத்தில் இருந்து இயேசுவின் சிலுவையின் பயணத்தை தொடர்ந்தாள். துன்பம், துயரம், கவலை, கண்ணீர், அவமானம், துரோகம், தனிமை, நோய் என்னும் சுமைகளைத் தாங்கி இயேசுவின் சிலுவையோடு ஒன்றித்து சபையின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். இயேசுவின் மீது கொண்ட அசைக்க முடியாத அன்பினாலும் நம்பிக்கையினாலும் அன்னை பேனடா தனது இலட்சியப் பயணத்தில் வெற்றி கண்டார்.

திருச்சிலுவையில்தான் இரட்சணியம் எனும் விருதுவாக்கிற்கு இணங்க ஆன்மீக தாகத்துடன் பல சவால்களை எதிர்கொண்டு மனித நேயத்தை உயர்த்த திருச்சபைக்கு வலுவூட்டிய இவர்களின் பணிவாழ்வை பின்பற்றி குருக்களும் கன்னியர்களும் பொதுநிலையினர் அங்கத்தவர்களும் தம்மை இறைமகன் இயேசுவிற்கு அர்ப்பணமாக்கி பணிபுரிகின்றனர்.

**பொதுநிலையினரின் ஆன்மீகம் :**

திருச்சிலுவையானது இயேசுவின் தந்தையுடனான ஆழமான அன்பையும் நிபந்தனையற்ற மன்னிப்புடன் கூடிய இரக்கத்தையும், தனது தியாகப்பலியினால் வெற்றி கொண்ட மனித மீட்பின் அடையாளத்தையும் வெளிக்காட்டுவதாக அமைகின்றது. இதனால் திருச்சிலுவையை அணியும்போதெல்லாம் எமதுசாட்சிய வாழ்வினால் இதனை வாழவும் மனுக்குலத்தை வாழப்பண்ணுவதுமே ஆன்மீகமாகும்.

**பொதுநிலையினரின் பணி :**

ஒவ்வொரு பொதுநிலையினரினதும் முதல் பணித்தளமாக குடும்பம் விளங்குகின்றது. பின் பங்கு, வேலை புரியும் இடம், சுற்றுச்சூழல், சமூகம் என இது விரிவடைகின்றது. இறையாட்சியின் மதிப்பீடுகளை தமது குடும்பத்தில் வாழ்வதும் அதை மற்றவர்களோடு தம் வாழ்வாலும் செயலாலும் பேச்சினாலும் பகிர்ந்து வாழச் செய்வதும்தான் பணியின் அடித்தளமும் நோக்கமுமாகும்.

அருட்சகோதரி. றோமலா அன்ரனி (HC)

"நீ பேசினாலும், பேசாமல் அமைதியாய் இருந்தாலும் அது அன்பின் நிமித்தமாய் இருக்கட்டும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பேனா



## எல்லைகளை விரிவாக்குங்கள், எண்ணங்களை விசாலமாக்குங்கள்

வாசகப்பெருமக்களே வணக்கம்!

திருமலைத்தீபத்திற்கு பெருகிவரும் ஆதரவிற்கும், தேடலுக்கும் காரணமான உங்களுக்கு முதலில் என் மனம்நிறை நன்றிகள். பத்திரிகையை வாசித்த நீங்கள் அடுத்தவர்க்கு இப்பத்திரிகை பற்றிச் சொல்கிறீர்கள். இதில் வரும் கட்டுரைகள் பற்றி விவாதிக்கிறீர்கள்! பாராட்டுகிறீர்கள்! முக்கியமாக குறைகளை முன்வந்து சுட்டிக்காட்டுகிறீர்கள்! இத்துணை ஆர்வம் இப்பத்திரிகை மட்டில் முளைவிட காரணமாக நான் காண்பது எம் குழுமம் **Think outside the Box** என்பதை எம் விருதுவாக்காக கொண்டிருப்பதாகும். எல்லைகளைக் கடந்து சிந்தியுங்கள். இது எம் கண்டுபிடிப்பல்ல வெற்றியாளர்களின் தாரகை மந்திரம். எல்லைகளைக் கடந்து சிந்தியுங்கள் என்ற உருவகத்தின் அர்த்தம் வித்தியாசமாய், வழமைக்கு மாறாய், புதிய கண்ணோட்டத்தில் சிந்தியுங்கள் என்பதாகும். அது அவ்வளவு எளிதானது அல்ல என்பது நிதர்சனம்.

**செக்குமாடு** என்ற சொற்பதத்தை சிலவேளை சில மனிதர்களுக்கும், சில ஆசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் நாம் பட்டப்பெயராக கொடுத்திருப்போம். அதன் அர்த்தமென்ன என்று கேட்டால் அவர் "அரைத்த மாவையே அரைப்பவர்" என்று பொருள் தருவார்கள். செக்குமாடு என்பது எண்ணெய் எடுக்கும் செக்கைச் சுற்றிச் சுற்றியே வந்துகொண்டிருக்கும். அதற்குத் தெரிந்ததெல்லாம் அது மட்டும்தான். அதற்கு அப்பால் சென்று செயற்படுவது குறித்த நோக்கமே அதற்கு இருக்காது. இதற்கு அடுத்தாற்போல் பாவிக்கப்படும் இன்னுமொரு உவமைத்தொடர் **கிணற்றுத்தவளை**. இது தனக்கு தெரிந்தது மட்டும்தான் உலகம். அதற்கு மேல் எதுவும் இல்லை என்று உறுதியாக நம்பிக்கொண்டு யார் என்ன சொன்னாலும் காதில் வாங்காத குறுகிய எண்ணம்கொண்டோரைக் குறிக்கப் பயன்படுவதாகும். செக்குமாடு செக்கிழுத்தே சாவதுபோல், கிணற்றுத்தவளை கிணறுதான் உலகம் என்று அதனுள்ளேயே மடிவது போல் எல்லைகளைத் தாண்டிச் சிந்திக்க தயாரற்றோரும் தம் முட்டாள்தனத்திலும், அறியாமையிலுமே மடிந்துபோகிறார்கள்.

**வழமையாய்ச் செய்வது என்பது நம்முடைய சரித்திரமல்ல நமக்குப் பிடித்திருக்கும் தரித்திரம்!**

இயேசு ஆண்டவரை கொண்டாடுகிற நாம் எல்லோரும் இயேசுவைப் போல் சிந்திக்க முயற்சியாவது எடுக்கிறோமா? அதற்கு இயேசு எப்படிச் சிந்தித்தார் என்று நாம் முதலில் அறிய வேண்டுமே! நமக்கு இயேசு பற்றி அறிவிக்கப்பட்டிருப்பதும், அறிவிக்கப்படுவதும் என்ன? அவர் கடவுள், புதுமைகள் செய்தவர், வல்லமை நிறைந்தவர், அநியாயமாக அடிக்கப்பட்டார், நம் பாவங்களுக்காக மரித்தார், சாவையும் வென்று உயிர்த்தார். இதுபோன்ற இயேசு பற்றிய படிப்பினைகள் மட்டுமே போதுமென்று இருப்பதால்தான் எம் வாழ்வின் பல வேளைகளில் இயேசுவும், அவர் போதனைகளும் எம்மைவிட்டு தூரம் நிற்கின்றன. முதலில் இயேசுவை ஏன் அக்கால குருக்களும், தலைமைச் சங்கத்தினரும், பரிசேயரும் வெறுத்தார்கள் என்ற கேள்வியைக் கேட்டுப்பாருங்கள். இயேசுவும், அக்கால யூத குருக்கள், தலைவர்களும் ஒரே சமய நம்பிக்கை கொண்டவர்களாக, யூதர்களாக இருந்த போதும் ஏன் இயேசுவைக் கொல்வதில் அவர்கள் மும்முரம் காட்டினார்கள்? எதற்காக இயேசுவை சாதாரண மக்கள் மட்டுமல்லாது நேர்மையான பரிசேயர்களும், திருச்சட்ட அறிஞர்களும் தேடி வந்தார்கள்? குருக்களும், திருச்சட்ட வல்லுனர்களும் ஆலயத்திலும், செபக்கூடங்களிலும் போதனை செய்த போது, இயேசுவும் போதிக்க வேண்டிய கட்டாயம் எதனால் ஏற்பட்டது? இரு போதனைகளுக்குள்ளும் இருந்த வித்தியாசம் என்ன? அனைத்திற்கும் ஒரே பதில்தான் இயேசு அக்கால கோட்பாடுகளிலிருந்து வித்தியாசமாகச் சிந்தித்தார். அவரின் உறவு எல்லைகள், கட்டுப்பாடுகளைக் கடந்து விரிந்தது. அவரின் எண்ணங்கள் குறுகிய பார்வைகளைக் களைந்து விசாலமாய்ப் பரந்தது. இறுகிய மனங்களால் அநாதைகளாக்கப்பட்ட அனைவரையும் அரவணைத்து கடவுளன்பைக் காட்டியது.

இயேசுக்கிறிஸ்துவின் வழி நாமும் நடக்கிறோம், அவர் நற்செய்தியை வாழ்கிறோம் என்று நீங்கள் உரக்கச் சொல்லவேண்டுமென்றால் உங்கள் எல்லைகளை விரிவாக்குங்கள், எண்ணங்களை விசாலமாக்குங்கள். இது விசுவாச வாழ்விற்கான வெற்றி வழி மட்டுமல்ல முழு வாழ்விற்குமான வெற்றியின் வழி. இன்று நாம் எதில் அடி எடுத்து வைத்தாலும் நமக்கு உதவுவது போல் நடித்து நம்மை சுற்றியிருக்கும் கூட்டம் நம்முன் போடும் முதல் தடைக்கல் "வழமையா இப்படிச் செய்றதில்ல, காலாகாலமா நாங்க இத செய்து வாறம், இது என்ன புதினமாக் கிடக்கு" என்பதுதான். இந்த வழமையாச் செய்வது என்பது நம்முடைய சரித்திரம் அல்ல. இது நமக்குப் பிடித்திருக்கும் தரித்திரம். வழமையாச் செய்ற மாதிரி செய்யுங்கள் என்று அழைப்பு விடுக்கின்றவர்களின் வாழ்வைக் கொஞ்சம் கூர்ந்து பாருங்கள்: பயணங்கள் மாட்டுவண்டியிலா அல்லது கார், மோட்டார்சைக்கிளிலா? தூங்குவது திண்ணையிலா அல்லது கட்டில் மெத்தையிலா? இரவில் பாவிப்பது மின்சாரமா அல்லது வெறும் கைவிளக்கா? தொடர்பு கொள்வது இன்னும் புறா தூது, கடிதம் மூலமா அல்லது **sms, email,** கையடக்க தொலைபேசியிலா? அன்றாட வாழ்வில் தங்களுக்குத் தோதான விடயங்களை மாற்றிக்கொள்ள தயாராய் உள்ள இந்தக் கூட்டம் தங்கள் இருப்புக்கு ஆபத்துவரும் என்று கருதும் விடயங்களை மாற்றாமல் பாதுகாப்பதில் கபடமாய் செயற்பட பாவிக்கும் ஆயுதம்தான் வழமையாய், காலம் காலமாய், பாரம்பரியமாய் போன்ற நாடகப் பதங்கள்.

நாம் வளரவேண்டும். இயேசுவின் வழி நின்று எம்மை உலகிற்கு எடுத்துக்காட்ட வேண்டும். காலத்தின் மாற்றங்களுக்கு ஏற்ப நற்செய்தியை வல்லமையோடு பறைசாற்றும் சாட்சிகளாய் எம்மை ஆக்கிக்கொள்ள வேண்டும். அதற்கு மக்களின் வாழ்வினைத் தொடும் ஒவ்வொன்றையும் நம் நற்செய்தி அறிவிப்பின் புதிய ஆயுதங்களாக்குவோம். நற்செய்தி மீள் அறிவிப்புச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தை எம் ஆயரிலும், மறைமாவட்ட நம்பிக்கையாளர்கள் அரங்கிலும் தூய ஆவியார் தூண்டி எழுப்பியிருப்பதன் காரணம் தற்கால சூழலின் தேவை. எனவே எம் சிந்தனைகளின் எல்லைகளை விரிவாக்குவோம், நம் செயற்பாடுகளைச் செதுக்கும் எண்ணங்களை விசாலமாக்குவோம் என அழைத்து வாழ்த்துகிறேன்.

**ஆசிரியர்**

---

## கிறிஸ்தவ குடும்பமாய் நாம் வளர

**01. இந்த மூன்று சொற்களைச் சொல்லுங்கள்**

ஆரோக்கியமான குடும்பம் இந்த மூன்று சொற்களைப் பயன்படுத்த வேண்டும்.

1. "தயவுசெய்து"
2. "நன்றி"
3. "மன்னிக்கவும்"

நாம் அனைவரும் தவறு செய்கிறோம் சில சமயங்களில் திருமணத்தில் யாரோ ஒருவர் புண்படுகிறார். குடும்பத்தில், கடுமையான வார்த்தைகள் பேசப்படுகின்றன. ஆனால் தயவுசெய்து சமரசம் செய்யாமல் சூரியனை மறைய விடாதீர்கள் குடும்பத்தில் ஒவ்வொரு நாளும் அமைதி ஏற்படட்டும்.

**02. சிறிய விஷயங்களைச் செய்யுங்கள்**

திருமண வாழ்க்கையில் பல சிரமங்கள் உள்ளன. போதிய வேலை அல்லது பணம் இல்லாத போது, குழந்தைகளுக்கு பிரச்சனைகள் தோன்றும் போது, பல முறை கணவன் மனைவி கொஞ்சம் பிளவுபட்டு தங்களுக்குள் வாதிடுகிறார்கள். ஆயினும் கூட நாம் இதைக் கண்டு வருத்தப்படக்கூடாது. வாதம் இருக்கும் தருணத்தை விட அன்பு வலிமையானது. நீங்கள் வாதிட்ட ஒரு நாளை சமாதானம் செய்யாமல் முடிக்க வேண்டாம். எப்போதும் சமாதானம் செய்ய ஐக்கிய நாடுகள் சபையை வீட்டிற்கு அழைக்கவேண்டிய அவசியமில்லை ஒரு சிறிய சைகை போதுமானது.



**03. கனவுகள் காணுங்கள்**

ஒன்பது மாதங்களுக்கு ஒவ்வொரு தாயும் தந்தையும் தங்கள் குழந்தையைப் பற்றி கனவு காண்கிறார்கள். அவர் அல்லது அவள் எந்த வகையான குழந்தையாக இருப்பார்கள் என்று அவர்கள் கனவு காண்கிறார்கள். கனவுகள் இல்லாத குடும்பத்தை நீங்கள் கொண்டிருக்க முடியாது. ஒரு குடும்பம் கனவு காணும் திறனை இழந்தவுடன் குழந்தைகள் வளராது, அன்பு வளராது, வாழ்க்கை சுருங்குகிறது.

ஆகவே ஒவ்வொரு மாலையும், மனசாட்சியை நீங்கள் ஆராயும் போது, இந்த கேள்வியையும் உங்களிடம் கேட்கும் படி நான் உங்களிடம் கேட்கிறேன். இன்று நான் என் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பற்றி கனவு கண்டேனா? எனக்கு முன் சென்ற என் பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டி பற்றி நான் கனவு கண்டேனா? கனவு காண்பது மிகவும் முக்கியம். குறிப்பாக குடும்பங்கிளில் கனவு காண்பது மிக மிக முக்கியம். கனவு காணும் இந்த திறனை இழக்காதீர்கள்.

**04. விளையாட நேரம் ஒதுக்குங்கள்**

நான் எப்போதும் இளம் தம்பதியினரிடம் ஒரு கேள்வியைக் கேட்பதுண்டு. நீங்கள் உங்கள் குழந்தைகளுடன் விளையாடுகிறீர்களா? அவர்களில் பெரும்பாலானோர் பதிலளிக்கிறார்கள் தந்தையே நீங்கள் என்ன கேட்கிறீர்கள் எங்களுக்கு புரியவில்லை? ஆம் நீங்கள் வியைாடுகிறீர்களா? உங்கள் குழந்தைகளுடன் நேரம் செலவிடுகிறீர்களா? என்று மீண்டும் கேட்பேன்.

**05. ஒன்றாக மன்றாடுங்கள்**

குடும்பத்தில் தான் நாம் முதலில் இறைவனிடம் மன்றாட கற்றுக்கொள்கிறோம். மறந்துவிடாதீர்கள் ஒன்றாக செபிக்கும் குடும்பம் ஒன்றாக இருக்கும். இது முக்கியமானது. அங்கே நாம் கடவுளை அறிந்து கொள்வதற்கும் விசுவாசமுள்ள ஆண்களாகவும், பெண்களாகவும் வளரவும், கடவுளின் பெரிய குடும்பமான திருச்சபையின் உறுப்பினர்களாக நம்மைப் பார்க்கவும் கற்றுக்கொள்கிறோம்.

குடும்பத்தில் நாம் எப்படி அன்புகொள்ள வேண்டும், மன்னிக்க வேண்டும், தாராளமாகவும் வெளிப்படையாகவும் இருக்க வேண்டும் நம்முடைய சொந்த தேவைகளுக்கு அப்பால் செல்லவும் மாற்றங்களைச் சந்திக்கவும், அவர்களுடன் நம் வாழ்க்கையைப் பகிர்ந்து கொள்ளவும் கற்றுக்கொள்கிறோம். அதனால் தான் ஒரு குடும்பமாக செபிப்பது மிகவும் மிகவும் முக்கியமானது. அதனால் தான் தேவாலயத்திற்கான கடவுளின் திட்டத்தில் குடும்பம் மிகவும் முக்கியம்.

ஆதாரம் – வெரித்தாஸ் தமிழ்

"ஒருவரும் செய்யாவிட்டாலும் சரியென்பது சரியே! எல்லோருமே செய்தாலும் பிழையென்பது பிழையே!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மறை ஆற்றலைப் பிரித்தறிதல்

அண்மைக் காலத்திலே நேர்மறைச் சிந்தனை **(Positive Thinking)** பற்றிப் பல கருத்துக்கள் பரவலாகப் பேசப்பட்டு வருகின்றன. இந்த உலகம் நல்லது. உலகப் படைப்புக்களெல்லாம் நல்லவை, எல்லோரும் நல்லவர்கள். எல்லாம் நன்மைக்கே என்ற எண்ணப்போக்கு நேர்மறைச் சிந்தனையின் வெளிப்பாடாகும்.

நேர்மறைச் சிந்தனை பற்றிய அழகான கதையொன்றைப் பற்றிப் பார்ப்போம். கடுமையான நோயினால் பாதிக்கப்பட்ட இரு இராணுவத்தினர் வைத்தியசாலையின் ஒரு அறையிலே தங்க வைக்கப்பட்டிருந்தனர். அறையின் யன்னல் அருகே இருந்த நோயாளி ஒவ்வொரு நாளும் மதிய வேளையில் ஏறக்குறைய ஒரு மணித்தியாலம் படுக்கையில் இருந்து இருத்தி வைக்கப்படுவார். மற்றைய நோயாளி எழுந்திருக்க முடியாமையினால் படுக்கையிலேயே இருந்தார். இவ்விருவரும் தங்கள் மனைவிமார், பிள்ளைகள், வேலை, இராணுவத்தில் தங்களின் ஈடுபாடு, விடுமுறையை எப்படிச் செலவிட்டனர் எனப் பல விடயங்களைத் தங்களுக்குள் பகிர்ந்து கொண்டனர். ஒவ்வொரு மத்தியான வேளையிலும் யன்னல் அருகிலிருக்கும் நோயாளி தான் எழுந்து உட்கார்ந்து இருக்கும்போது யன்னல் ஊடாக தான் பார்க்கும் காட்சிகளை ஒவ்வொன்றாக விபரிப்பார். இதை மற்றவர் ஆர்வத்தோடு படுத்திருந்தவாறே செவிமடுப்பார். அந்த ஒரு மணித்தியாலம் வெளி உலகிலே தான் உலவுவது போலும், இயற்கையை அனுபவிப்பது போலும் மனிதர்களோடு உரையாடுவது போலும் கற்பனை உலகில் மிதப்பார். அவ்வேளைக்காக ஒவ்வொரு நாளும் ஆவலோடு காத்திருப்பார். யன்னலூடாகப் பார்க்கின்ற போது ஒரு பூங்கா தெரிகிறது. அத்தோடு சேர்ந்து ஒரு நீர்த்தடாகம் உள்ளது. வாத்துக்கள் அத்தடாகத்திலே நீந்திக் கொண்டிருக்கின்றன. சிறுவர்களுக்கென வடிவமைக்கப்பட்ட சிறிய படகுகளிலே சிறார்கள் சவாரி செய்கின்றனர். தடாகத்தின் ஒரு பகுதியிலே ஆம்பல் மலர்கள் இதழ் விரித்து மலர்ந்திருக்கின்றன. பூங்காவின் ஏனைய பகுதிகளில் பூக்கள் கண்சிமிட்டுகின்றன. இளம் காதலர்கள் கைகோர்த்துக் கொண்டு தங்கள் எதிர்காலக் கனவுகளோடு உலா வருகின்றனர். வீதியின் இருமருங்கே இருக்கும் பிரமாண்டமான மரங்களின் தூர அழகு அந்த நகரத்தையே அழகுபடுத்துகின்றது.



யன்னல் ஓரத்திலிருந்தவர் ஒவ்வொன்றாக விபரிக்க விபரிக்க மற்றவர் முகத்திலே ஆனந்தமும் ஆர்வமும் கரைபுரண்டோடின. எல்லாக் காட்சிகளையும் அழகான திரைப்படமாகத் தனது மனத்திரையிலே ஓடவிட்டார்.


நாட்கள் இவ்வாறு நகர்ந்து கொண்டிருந்தன. அறையின் மற்றப் பக்கத்தில் இருந்தவருக்கு வஞ்சக எண்ணம் உதித்தது. இந்த அழகான காட்சிகளை அவர் (யன்னல் ஓரத்தில்) மட்டும் இரசிக்க வேண்டும், நானும் பார்த்து ரசித்தால் என்ன? இது அநியாயமல்லவா? "எனக்கு யன்னல் ஓரத்தில் படுக்கை வேண்டும்" என தனக்குள்ளே சிந்திக்கத் தொடங்கினார். ஆரம்பத்திலே கடந்து போன இவ்வெண்ணம் படிப்படியாகத் தீவிரமாகியது. வாழ்க்கையில் பலவற்றை இழக்கின்றேன் என்ற எண்ணம் மேலோங்கியது. படிப்படியாக மற்றவரிடத்திலே கசப்புணர்வும் பகைமையும் ஏற்பட்டு இறுதியில் வெறுப்பாக மாறியது. இந்த ஆழ்மனச் சிந்தனை அவரது உறக்கத்தை தடுத்தது நிம்மதியைக் குலைத்தது. எனக்கு யன்னல் அருகே படுக்கை வேண்டுமென்ற எண்ணம் மட்டுமே மேலோங்கி ஒலித்தது.

ஒருநாள் நடுச்சாம வேளையில் யன்னல் அருகில் இருந்தவர் கடுமையாக இருமத் தொடங்கினார். மற்றையவர் மல்லாந்து படுத்துக்கொண்டே மங்கலான ஒளியில் எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்தார். இருமல் அதிகரித்தது. தொடர்ச்சியாகப் பலமாக இருமத் தொடங்கினார். அவசர வேளையில் அழுத்த வேண்டிய பொத்தானை இருட்டிலே தேடிக் கொண்டிருந்தார். அந்நேரத்தில் தானும் தனது படுக்கையருகில் இருக்கும் பொத்தானை அழுத்தியிருந்தால் உதவிக்கு தாதி ஒருவர் ஓடி வந்திருப்பார். அதைக்கூட செய்ய மனம் இடம்கொடுக்கவில்லை. ஐந்து நிமிடங்களிலே இருமல் படிப்படியாகக் குறைந்தது. ஆழ்ந்த மூச்சுச் சத்தம் மட்டுமே கேட்டது. சிறிது நேரத்தின் பின் எல்லாம் நிசப்தமாகியது. மரண அமைதி நிலவியது.

மறுநாள் இருவரது காலைத் தேவைகளைக் கவனிப்பதற்காக தாதி அறைக்குள் நுழைந்தார். யன்னல் ஓரத்தில் உயிரற்றுக் கிடந்த உடலைப் பார்த்துக் கவலையடைந்தவளாக மேற்கொண்டு செய்ய வேண்டிய காரியங்களைக் கவனித்தாள். உடலம் அகற்றப்பட்டதும் மற்றவர் தாதியிடத்திலே தன்னை யன்னல் ஓரம் நகர்த்தும்படி கேட்டார். கட்டில் யன்னல் ஓரம் நகர்த்தப்பட்டது. மிகுந்த மகிழ்ச்சியோடும் மனநிறைவோடும் கட்டிலில் நிமிர்ந்து படுத்திருந்தவாறே தலையைத் திருப்பி யன்னல் ஊடாகப் பார்த்தார். யன்னலுக்கு அப்பால் உயர்ந்த வெள்ளைச்சுவர் மட்டுமே தெரிந்தது. தாதியை மீண்டும் கூப்பிட்டு இருந்தவரோடு நடந்த உரையாடலையும் அவர் கூறிய அழகான பூங்காவின் விபரிப்பையும் கூறினார். தாதி ஆச்சரியத்தோடு "யன்னலுக்கு வெளியே உள்ள வெள்ளைச் சுவரைக் கூட அவரால் பார்க்க முடியாதே அவர் பார்வை இழந்தவர் ஆயிற்றே என்றார்." தொடர்ந்து பேசும்போது அவர் சொன்னார், உங்களை உற்சாகப்படுத்துவதற்காக அவ்வாறு கூறியிருக்கலாம் அல்லது வாழ்க்கையை அவர் பார்த்த விதம் அவ்வாறாக இருந்திருக்கலாம்" என்றார்.

2 அருட்தந்தை S. A. பொன்சியன் அமதி

வாழ்க்கையின் வளமான பக்கத்தை மட்டும் பார்க்கும் பலர் நம் மத்தியிலே உள்ளனர். இறந்தவர் நேர்மறை ஆற்றலை பிரித்தறியும் முறையைக் கையாண்டிருக்கிறார். மனிதர்கள், சம்பவங்கள் பற்றிய எதிர்மறை பக்கத்தை மட்டுமே பார்த்து எமது காலத்தை நாம் வீணடிக்க கூடும். இதை உணர்ந்தவர்களாக நேர்மறை ஆற்றலை பிரித்தறியும் முறையை நாமும் கையாளலாம். உங்கள் பெயரைக் கெடுப்பதற்காக சிலர் பொய்யான வதந்திகளைப் பரப்புகிறார் என வைத்துக் கொள்வோம். உங்களைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும் என்ற அடிப்படையில் கூறப்பட்ட வதந்திகளின் உண்மைத்தன்மை உங்களுக்கு மட்டுமே தெரியும். உங்கள் சிந்தனை ஓட்டத்தை அவதானியுங்கள். உங்கள் கட்டுப்பாட்டுக்குள் சிந்தனையை வைத்துக் கொள்ளுங்கள். அடுத்தது நேர்மறை ஆற்றல் பிரித்தறியும் முறைமூலம் எதிர்மறை எண்ணங்களை அகற்றுங்கள். உங்களைப் பற்றி அவதூறு கூறியவர்கள் மட்டில் கோபம் கொள்ள வேண்டாம். அவ்வாறு அவர்கள் கூறியதற்கான காரணங்கள் இருக்கலாம். அக்காரணங்களை நீங்கள் கருத்திற் கொள்ளலாம். நேர்மறையாக அவர்களை அணுகி இணக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம்.



உங்கள் எல்லோருக்குள்ளும் ஏராளமான நேர்மறை ஆற்றல்கள் உள்ளன. இதைப் பயன்படுத்தி எதிர்மறைச் சிந்தனைகளையும் மனிதர்களையும் பிரித்தறிய முடியும். எதிர்மறை விடயங்கள் உங்களைச் சூழ்ந்து கொள்ள அனுமதிக்காதீர்கள். ஒவ்வொரு கணப்பொழுதையும் அவதானியுங்கள். எதிர்மறைச் சிந்தனையும், மனிதர்களும் உங்களை ஆட்கொள்ளா வண்ணம் பார்த்துக் கொள்ளுங்கள். உங்களையும் மீறி எதிர்மறைச் சிந்தனைகள், மனிதர்கள் உள் நுழைகின்றார்கள் எனில் நேர்மறை ஆற்றல் பகுத்தறியும் முறையைப் பயன்படுத்தி உங்கள் சூழலை நேர்மறையாக மாற்றுங்கள். இதை உங்கள் வாழ்க்கையின் வழக்கமான பழக்கமாக மாற்றுங்கள்.

வெகுசனத் தொடர்பு சாதனங்கள், சமூக வலைத்தளங்கள் அனேகமாக எதிர்மறைச் சிந்தனைகளையே வளர்க்கின்றன. அவற்றிலிருந்து விலகியிருப்பது நன்மை பயக்கும். அதேபோல் எதிர்மறை விடயங்களைப் பரப்பும், நபர்களிடமிருந்தும் உங்களை தூரப்படுத்திக் கொள்ளல் நன்மையைத் தரும்.

# திருகோணமலை புனித மரியாள் பேராலய 127வது வருடாந்த உற்சவம்

திரு. ஜோ. நோமன் பல்தஸார்.

கிழக்கு இலங்கையின் தலைநகரம் திருகோணமலையில் பெரியகடைப்பகுதியில் இன்று கம்பீரமாக காட்சி தரும் புனித மரியாள் பேராலயத்திற்கு இது 127வது ஆண்டு விழா. 1893ஆம் ஆண்டில் திருகோணமலை மறை மாவட்டமாக பிரகடனப்படுத்தப்பட்டது. ஆயினும் ஒறட்டோறியன்ஸ் சபையினர் திருகோணமலையில் பணியாற்றிய 1782ஆம் ஆண்டு காலப்பகுதியில் புனித மரியாள் பேராலயம் ஓர் சிற்றாலயமாக இவ்விடத்தில் காணப்பட்டது. 1783ஆம் ஆண்டிலிருந்து பேணப்படும் ஆலயத்தின் திருமுழுக்கு, திருமண பதிவுகள் இதற்கு சான்றுபகர்கின்றன. இக்குறிப்புக்கள் தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1782 காலப்பகுதியில் சிறிதாக இருந்த ஆலயம் 1802 ஆம் ஆண்டில் பெரிதாக்கப்பட்டது. 1782 தொடக்கம் 1893 வரையான காலப்பகுதியில் நடைபெற்ற திருத்த வேலைகளுக்கு பிரித்தானிய படை வீரர்களின் உதவி கிடைக்கப்பெற்றுள்ளது. 1847 தொடக்கம் 1855 வரையான காலப்பகுதியில் 18 அயர்லாந்து படைவீரர்கள் மரணமான போது அவர்களின் பெயர் குறிப்பிட்டு ஆலய வளவில் நிறுவப்பட்ட கற்பலகைகள் இவ்வரலாற்றை எடுத்தியம்புகின்றன. 1852 இல் அருட்பணி எல்.எம்.கீட்டிங் அடிகளார் கோயில் முகப்பையும் கோயில் இரு பக்கங்களையும் அமைத்தார். 1893இல் அருட்பணி சி.ஹென்றி பூரி அடிகளார் கோயிலின் பலிபீடம் மற்றும் ஆலயத்தின் இருபக்க முன் கோபுரங்களையும் அமைத்தார். அக் கோபுரத்தினுள் தான் கோயில் மணி இருந்தது. அருட்பணி தியோபிளஸ் ராகல் அடிகளாரின் காலத்தில் அக் கோபுரம் கட்டட பாதுகாப்புக் கருதி அகற்றப்பட்டது. நீண்ட வரலாற்றைக் கொண்ட புனித மரியாள் பேராலயத்தில் பணியாற்றிய முதலாவது சுதேச குரு அருட்பணி அலோசியஸ் மேரி (இ.ச) ஆவார். அவரை தொடர்ந்து 21 பங்குத்தந்தையர்கள் இங்கு கடமையாற்றி உள்ளனர். இவர்களில் சில பங்குத் தந்தையர்களின் காலத்தின் குறிப்பிடத்தக்க திருத்த வேலைகள் ஆலயக்கட்டடத்தில் நடைபெற்றிருந்தாலும் 2019 ஆம் ஆண்டில்தான் பாரிய திருத்தப் பணியொன்று அருட்பணி போல்றொபின்சன் அடிகள் தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. அதனால் பாரிய மாற்றங்களுடன் முன்னர் இருந்த ஆலயத்தை விட தற்போது புதுப்பொலிவுடன் விளங்குகிறது புனித மரியாள் பேராலயம். ஆலயத்தின் உட்புறநிலம், கூரை என்பன முற்றிலும் புதிதாக மாற்றப்பட்டது. நற்கருணை சிற்றாலயம், பீடம், உள் அலங்காரம் அனைத்தும் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இவ் அரிய பணியைச்செய்து முடித்த அருட்பணி போல் றொபின்சன் அடிகளார்க்கும் இதுவரை கடமையாற்றிய அனைத்து பங்கு தந்தையர்களுக்கும் தற்போதய ஆயர் பேரருட்திரு கி. நோயல் இம்மானுவேல் ஆண்டகைக்கும், முன்னாள் ஆயர்களுக்கும் எம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மகிழ்கிறோம்.


# நாங்களும் பங்காளிகளே



ஆசிரியர் அவர்கட்கு,
தீபம் 67இல் "நல்வாழ்வு காணவே"
எனும் போட்டிக் கவிதை, கவிதை வழவில் பிரசுரமாகியிருந்தது. இதன் தவறு எங்கேயுள்ளது? கவிதையை எழுதியவர் இவரா அல்லது இவர்தான் பரிசுக்குரியவரா? அல்லது முடிவுத்திகதிக்கு முன் வெற்றியாளர் தெரியப்பட்டுள்ளாரா? தவறு எங்கே நடந்துள்ளது என்பதை அறிய ஆவலாய் உள்ளேன்.

திருமதி. ஸ்ரெலா ஜெரோம்,

நீங்கள் கணித்ததுபோல் குறிப்பிட்ட நபர் வெற்றியாளரல்ல. முடிவுத்திகதிக்கு முன் முடிவுகள் அறிவிக்கப்படவுமல்ல. மாறாக இக்கவிதை எமக்கு குறிப்பிட்ட பெயர்விபரத்தோடு போட்டி பற்றிய எவ்வித குறிப்புமின்றி அனுப்பப்பட்டிருந்தது. மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்ட இக்கவிதை ஒரு ஆக்கமாகக் கருதப்பட்டு தவறுதலாக வெளியிடப்பட்டுள்ளது. தங்கள் அவதானிப்பிற்கும், அறிவிப்பிற்கும் நன்றிகள். இத்தவறுகள் இனிமேலும் நடைபெறாமலிருக்க ஆவண செய்வோம். நன்றி.



"எம் உதவியின்றி எம்மைப் படைத்தவர், எம் அனுமதியின்றி எம்மை மீட்கமாட்டார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன இளசுகளும் நாசமாய்ப்போன செல்போனும்

ஹாய் வாசகப் பெருமக்களே ! வணக்கம்ஸ்!..

- திரை தொடு Phone னோடும், தொடு திரை குச்சியோடும் ரீங்காரமிட்டுத் திரியும் என் இதயம் கவர்ந்த இளைய தலைமுறையை கொஞ்சம் சீண்டிப்பார்க்க ஆசை...
- கையில் iPhone னோடும், காதில் Ear-Phone னோடும், காதுக்குள் உள்ளி வைத்ததுபோல உல்லாசமாய் உலாவரும் என் இனிய இளையோரே கொஞ்சம் கேளுங்கோ!
- மாண்டபின் சவப்பெட்டிக்குள் அடங்கிவிடும் வாழ்க்கையை, வாழும்போது கணனிப் பெட்டிக்குள் வெறுமனே தொலைத்து விடாதீர்கள் மக்களே!
- எல்லா விஷயங்களிலும் Smart ஐ தேடி அலையும் உங்கள் மனசு, ஆன்மீக விஷயத்தில் மட்டும் கொஞ்சம் அசமந்தமாக இருப்பது தான் கவலை.
- வலைப்பின்னல் என்பதுதான் உங்கள் வாயில் அனேகமாய் உச்சரிக்கப்படும் வார்த்தை. ஆனால் அந்த வலைக்குள்ளேயே நீங்கள் சிக்கி சின்னாபின்னமாய் போவதுதான் வேதனை.



- இளையோரின் ஆசை என்னவென்று கேட்டதில் :

காலை Coffee Japanஇலே,
மதியம் Lunch New York இலே
Evening Tiffin Thailand இலே,
இரவு கேளிக்கை Los Angels இலே என்ற
நினைப்பில் திரிவதால் இந்த உலகிற்குள் நீங்கள்
தொலைந்து போவது உங்களுக்கே தெரிவதில்லை.

ஏனென்றால்

காலை எழுந்தவுடன் Facebook
பின்பு களிவு தருகின்ற Whatsapp
மாலை முழுவதும் You tube
இதை வழக்கப்படுத்தியதால் உங்களுக்கு மிஞ்சியது
இளமையில் வழுக்கை மட்டும்தான்.

- அவசரமாய் சுற்றும் உலகம் உங்கள் ஆசைகளையும் அளவின்றித் தூண்டுவதால்

Facebook இல் அறிமுகமாகி,
Skypeஇல் கதைத்துப் பேசி,
You Tube இல் நிச்சயித்து திருமணம் முடித்து.
Test Tubeஇல் குழந்தை பெற்று.
Twitter இல் சண்டை பிடித்து.
Instagram இல் Divorce கேட்கும் காலமாகி விட்டது.



- **ஒரு சின்ன அனுபவப் பகிர்வு ...**

அது ஒரு காலை நேரம், திருப்பலி முடித்து பணிமனையில் இருந்தேன்.
வாயிற்கதவு தட்டப்படும் ஒலி கேட்டு கதவைத் திறக்க
ஒரு தாய் தன் சேயான யௌவன குமாரி ஒருவருடன் நின்றிருந்தார்.
"பாதர் என்ட பிள்ளைக்கு யாரோ பில்லி சூனியம் வச்சித்தாங்க
கொஞ்சம் Bless பண்ணி விடுங்க" அழுகையுடன் கேட்டார்.
ஏன் அம்மா என்ன நடந்தது என வினவினேன்
"இல்ல பாதர் இரவில் இவள் எனக்குப் பக்கத்திலதான் படுப்பாள்:
ஆனால் நடுச்சாமத்திலே இவள்ர தலையணை அலறுது பாதர்:
"என்னாது தலையணை அலறுதா?" கேட்டதும் நான் அப்படியே ஷாக்காயித்தன் (Shock)
புதினம் என்னவென்று அறிய பிள்ளையைத் தனியே கூப்பிட்டு விசாரித்தேன்.
அவள் சொன்னாள் பாருங்கோ ஒரு கத... டெரர் கத..
"பாதர் உங்களிட்ட உண்மையச் செல்றன்.
என்ட Cell phone ஐ Vibration ல போட்டு தலாணிக்கு கீழ ஒழிச்சு வைப்பன்
நடுநிசியில என்ட ஜட்டம் Call பண்ணுவான். அப்ப தலாணி அதிரும்...
அப்புறம் கொல்லைப் பக்கம் போய் கதச்சித்து வருவன்
இது தெரியாம இந்த மனுஷி என்னமோ சொல்லுது பாதர்".
தயவுசெய்து என்னைக் காட்டிக் குடுக்காதீங்கோ!! விழி பிதுங்கினாள் குமாரி.
காலத்தின் கோலத்தை நினைத்து கலங்கிய நான்
அப்புறம் அம்மாவை அழைத்துச் சொன்னேன்.
"அம்மா உங்க பொண்ணுக்கு வச்சது பில்லி சூனியம் இல்லம்மா
அது செல்லி சூனியம்.

- வீட்டிலே பெற்றோர் பெரிய சாத்தானான LED Tvக்கு அடிமை

ரோட்டில இளையோர் குட்டிச் சாத்தானான Cell phone க்கு அடிமை.
சனியன பிடிச்சு பெனியனுக்க விட்ட மாதிரி
எல்லார் பாக்கட்டிலும் குட்டிச்சாத்தான் குந்தியிருக்கு



- அதனாலதானே நவீன இளைஞன் பாடுகிறான்

23ம் திருப்பாடலை இப்படி...

செல்போனே என் நல்லாயன், எனக்கேதும் குறையில்லை
பல்வேறு அளவுகளில் அவர் என் கரங்களில் தவழ்கிறார்.
என் கண்ணுக்கு குளிர்ச்சியான காட்சிகளை எனக்கு காட்டுகிறார்.
உலகின் கடைஎல்லை வரைக்கும் என்னை அழைத்துச் செல்கிறார்.
என்னைவிட்டு அவர் ஒரு நொடிகூடப் பிரிவதில்லை.
அவருக்காய் நான் எதையும் இழக்க அஞ்சமாட்டேன்
அவரது சகாக்களான Charger ம்.
Ear Phone உம் என்னைத் தேற்றும்.
அவர் என் கரத்தில் இருக்கையில் நான் எவரையும் கண்டு கொள்ள மாட்டேன்...



- செல்போன் இல்லாத கணம் ஒரு யுகமாய் மாறுகிறது இளசுகளுக்கு.

செல்போனே அவர்களுக்கு கடவுளாகி விட்டது.
SIM card தான் அவர்களது இதயம்.
Phone கடைகளும், நிறுவனங்களுமே அவர்களது கோவில்கள்
Phone பழுதுபார்க்கும் கடைகள் தான்
அவர்களுக்கு யாத்திரை ஸ்தலங்கள்.
பழுதுபார்க்கும் நபர்தான் அவர்களுக்கு கண்கண்ட தெய்வம்.
விதவித phone களை நோண்டுவதே அவர்களது வழிபாடு
அனேக Apps களை தரையிறக்குவதே அவர்களின் காட்சித் தியானம்
Ear -Phone மாட்டிக் கொண்டு இன்புறுவதே நாளாந்த பலி
அடுத்து என்ன Phone ஐ வாங்கலாம் என சிந்திப்பதே செபம்.
இதே அவலநிலை தொடர்ந்தால் எதிர்காலத்தில் இனி ...
ஆணுக்கும் பெண்ணுக்கும் திருமணம் நடக்காது. மாறாக
ஆணுக்கும் Phone க்கும்: பெண்ணுக்கும் Phone க்கும் தான் நடக்கும்
உஷார் மக்களே உஷார் ...

- இந்த பாழாய்ப்போன போன வச்சிக்கொண்டு இதுகள் படுற பாடு இருக்கே..

அம்மாடியோவ்... சொல்லி வேல இல்ல ...

❐ பொண்டுகள் இப்பெல்லாம் குனிஞ்ச தல நிமிர்ர இல்ல. அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்கிற கன்றாவியெல்லாம் இல்லைங்கோ ... Phone ஐ நோண்டித்தான்.

❐ கட்டிளம் காளையரின் Photo கள பாருங்கோ... பாம்பை விட அதிகமாக முட்டையும், பாலும் குடிச்சி ஜிம் பாடியாம் என்டு ... உடம்புல அங்க இஞ்ச வீங்கிக் கிடக்கு

❐ குமரிகள் மட்டும் என்ன சளைத்தவர்களா!!! இல்லாத பொல்லாத அழகுக்குறிப்பு வீடியோக்கள் பார்த்து, குசினிக்குள்ள ஒன்டையும் விடாம, உப்போட கூடிய முப்பத்திரெண்டையும் அரைச்சு முகத்தில பூசி... ஐயையோ கண்கொள்ளாக் காட்சி இல்ல இல்ல... கன்றாவிக் காட்சி

❐ இதுகளப் பார்த்து மயங்கி ஆடவரின் விழிகளில் காதல் விழுந்து, இதயம் நுழைந்து, உயிரில் கலந்திட, அப்பறமென்ன கல்லாணந்தான். கொஞ்ச நாளில் மனுஷியின் சாயம் வெளுக்கத் தொடங்கும் போதுதான் மைனர் மாப்பிள்ளையின் மனதில் மணியடிக்கும். ஆடடா வசமாய் வம்பில் மாட்டிக் கொண்டோம் என்று.

❐ என்ன செய்வது புலி வாலைப் பிடித்த கதைதான்.

ஆகவே மக்களே, போலிகளைக் கண்டு ஏமாறாதீர்கள்.

- இந்த செல்பி (Selfie) என்றொரு கோதாரியால நடக்கிற புதினங்கள் சொல்லி மாளாது.

– இதுகள பார்க்கும் போது மிருகக்காட்சி சாலைக்குள்ள நிற்கிற ஒரு பிரம்மதான் நமக்கு வரும்.
ஏனென்டா

ஒன்டு பல்ல இளிக்குது.
ஒன்டு முதுக சொரியுது.
இன்னொன்டு மரத்தில ஏறுது.
மற்றொன்டு தலகீழா தொங்குது.
ஒன்டு முறைச்சிப் பார்க்குது.
இன்னொன்டு முதுக காட்டுது...
அப்பப்பா... Photo வகையறாக்கள் தாங்க முடியல ...



– அதிலும் ஒருசில பொண்டுகள் தங்கட கைய மட்டும் எடுக்கிறது, குதிகால மட்டும் எடுக்கிறது, ஒரு காத மட்டும் போடுறது, தலை முடிய மட்டும் எடுக்கிறது, முகத்த மறைச்சிப் போடுறது என்டு ஏகப்பட்ட களேபரங்கள்... அதல்லாம் குறைப் பிரசவத்தில பிறந்ததுகளா என்டொரு சந்தேகம் எனக்கு.

- இந்த Cell Phone சோகக் கதைகளை இன்னும் நிறையவே எழுதலாம்...

ஆனால் இடந்தான் போதாது. இறுதியாக ஒரு முக்கிய விடயம். Cell Phone பாவனையால் நடந்தேறும் ஒருசில திகில் சம்பவங்கள்..

–பெற்றோரை கழுத்தறுத்து கொன்ற சம்பவம்
–தற்கொலைகளும், கொலைகளும், கடத்தல்களும் அரங்கேறும் காட்சிகள்
–கள்ளத் தொடர்புகள், காதலனோடு ஓட்டம்.
–பாலியல் அசிங்கங்கள் எனும் அருவருப்புகள்
–கள்ளக் கமராக்களால் ஏற்படும் மானப் பிரச்சினைகள்.
–பொய் வதந்திகளை Whatsapp... இல் பரப்புவதால் ஏற்படும் உறவுப் பிறழ்வுகள்
–அந்தரங்களை வெளிச்சம் போட்டுக் காட்டும் ஆசாமிகள்.
–Fake IDக்களும், மற்றவரது தகவல்களை திருடும் கும்பல்களும்...



- எதுவும் தன்னிலே நல்லதுதான், நன்மைக்காகவே உருவாக்கப்பட்டது.

அது மனிதருக்கு பொருந்தும், இயந்திரத்திற்கும் பொருந்தும். Cell Phoneம் தன்னிலே நல்லதுதான்.
அதன் பயன்களும், நன்மைகளும் உண்மையிலேயே மெச்சத்தக்கது.
ஆனாலும் அது யாருடைய கையில் இருக்குது என்பதிலும்,
என்ன நோக்கத்திற்காய் பயன்படுகிறது என்பதிலும் தான் விளைவு தங்கியிருக்கிறது.
எனவே, தொலைபேசியை தொல்லைபேசியாக மாற்றாமலிருப்போம்!
சிறிய அந்தக் கருவி நம்மைக் கட்டுப்படுத்தாமல் பார்த்துக் கொள்வோம்!
உணர்ச்சியற்ற இயந்திரத்தால் உணர்வுள்ள இதயங்களை காயப்படுத்தாமல் இருப்போம்!
முடிவாக, அன்னத்தைப் போல் பாலை மட்டுமே பிரித்துப் பருகப் பழகுவோம்

அருட்பணி. T. A. யூலியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீர் கட்டளையிடுவதைச் செய்ய எனக்கு வல்லமை தாரும் நீர் விரும்புவதைச் செய்ய எனக்கு கட்டளையிடும்."

# அமலமரித் தியாகிகள் சபையின் புதிய யாழ் மாகாண முதல்வர்

# Very. Rev. Fr. பெனடிக்ற் யூஜின் அவர்களுடன் நேர்காணல்

கிழக்கு மாகாணத்திற்கு பெருமை சேர்த்துக்கொண்டிருக்கும் அருட்பணியாளர் அவர்களே திருமலை தீபத்தின் கேள்விகளுக்கு நீங்கள் முன்வந்ததையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

**கேள்வி :- ஒருவரது வாழ்க்கையில் குடும்பம் தவிர்க்க முடியாத இடம் வகிக்கிறது. அந்த வகையில் தங்கள் குடும்பம், சிறுபராய நாட்கள் பற்றிய உங்கள் சிறு பகிர்வோடு இச்சந்திப்பை ஆரம்பிக்கலாமே?**

பதில்:- என்னுடைய தந்தை வைத்தி பெனடிக்ற் தாய் அன்னேசியா. எனக்கு மூன்று மூத்த சகோதரர்கள் கிங்ஸ்லி கிறிஸ்ரி லீனஸ் ஆவர். நான் நான்காவது பிள்ளை என்னுடைய பெற்றோரும் மூன்றாவது சகோதரரும் இறைவனடி சேர்ந்து விட்டார்கள். என்னுடைய பிறந்த மண் மூதூர். அந்த இடம் கடவுள் நம்பிக்கைக்கும், கல்விக்கும், இலக்கியத்திற்கும், புனித அந்தோனியாரின் வணக்கத்திற்கும் பெயர் போன இடம். என்னுடைய குடும்பமும் இதற்கு விதிவிலக்காக இருந்ததில்லை. நாளாந்த திருப்பலியில் பங்கெடுப்பதற்கான

ஊக்குவிப்பு, குடும்ப செபமாலை, கல்வி சார்ந்த ஊக்குவிப்பு, குடும்ப உறவு, பெரியோரை கணம் பண்ணுதல் போன்றவற்றில் என்னுடைய பெற்றோர் அதிக ஆர்வம் காட்டி இருந்தனர்.

குழந்தைப் பருவத்தில் சுட்டித்தனம் இருந்தாலும் என்னுடைய பெற்றோரின் கரிசனையும், கண்டிப்பும், எங்கள் உறவு சார்ந்த ஆசிரியர்களின் பங்களிப்பும் என்னை பல வழிகளிலும் ஊக்கப்படுத்தியது.

எங்களுடை புனித அந்தோனியார் ஆலயம் தான் எமக்கு எல்லாம். விடுமுறை நாட்களில் பாடசாலை மாணவர்களோடு கிரிக்கட் விளையாடிய பின்பு அவர்களோடு சுற்றி திரிந்து வீடு வரும் போது சில நேரங்களில் இதனால் தண்டிக்கப்படுவதும் உண்டு.

ஆலய செயற்பாடுகள், பாடசாலை நிகழ்வுகள் அனைத்திலும் பங்கெடுப்பது மகிழ்ச்சியான விடையமாக இருந்தது.



**கேள்வி :- குருத்துவப் பணிக்கு உங்களை அர்ப்பணிக்க உங்களுக்கு உந்து சக்தியாக, வழிகாட்டியாக இருந்தவர் அல்லது இருந்த சந்தர்ப்பம் என்று யாரை அல்லது எதை சொல்வீர்கள் ?**

பதில்:- அந்த நேரத்தில் இறந்து போன அமரர் முன்னைய நாள் அமலமரித்தியாகியுமான அருட்தந்தை இருதயநாதன் பேதுருப்பிள்ளை அடிகளாரை அன்போடு நினைவு கூருகின்றேன். குடும்பத்திலிருந்து என்னுடைய அழைத்தலைப் பெற்றுக் கொண்டாலும் அருட்தந்தை அவர்கள் தான் நான் அமலமரித்தியாகிகள் சபையில் இணைவதற்கும், அழைத்தலில் உறுதியாக வாழ்வதற்கும் துணையாக இருந்தவர்.

மூதூர் மண்ணிண் கத்தோலிக்க வாழ்க்கை முறையும், புனித அந்தோனியார் ஆலய பங்கு சமூக பங்களிப்பும், புனித அந்தோனியார் பாடசாலையின் பின்புலமும் என்னுடைய அழைத்தல் வாழ்விற்கும் வித்திட்டது.

**கேள்வி :- இப்பணி வாழ்வின் ஆண்டுகளில் கடந்து வந்த மறைமாவட்ட பணித்தள அனுபவங்கள் குறித்து நீங்கள் எங்கள் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள முடியுமா?**

பதில்:- அமலமரித்தியாகிகள் துறவற சபையில் 27 ஆண்டுகள் பூர்த்தி செய்ததோடு 23ஆவது ஆண்டில் குருவாக பயணம் செய்து கொண்டிருக்கின்றேன். துறவற குருவாக மிகவும் மகிழ்ச்சியாகவும், நிறைவாகவும், ஆத்ம திருப்தியோடும், ஆண்மீக கரிசனையோடும் வாழ இறைவன் தந்த சந்தர்ப்பத்திற்காகவும் இந்நேரத்தில் நன்றி சொல்கின்றேன்.

யாழ்ப்பாணம், மன்னார், பதுளை, திருகோணமலை, மட்டக்களப்பு போன்ற மறைமாவட்டங்களில் பணிபுரிந்த அனுபவங்கள் உண்டு. அத்தோடு பாகிஸ்தானில் பணிபுரிந்ததோடு உரோமாபுரியில் முதுகலைமானிப் பட்டத்திற்காக இருந்த காலங்களும் மறக்க முடியாத அனுபவங்கள்.

இந்த காலங்களில் பிரசங்கியாக பங்குத்தந்தையாக JRS இயக்குனராக பணிபுரிந்ததோடு, மறைமாவட்டங்களில் பணிபுரிந்த போது குடும்ப இயக்குணராக, ஆயரின் ஆலோசகராக, அமலமரித்தியாகிகள் சபையின் ஆலோசகராக, கத்தோலிக்கப் பத்திரிகையின் ஆசிரியராக, தேசிய மட்டத்தில் CFSL - ஒழுக்க இறையியல் குழுமத்தின் செயலாளராகவும், தேசிய குடும்ப பணியகத்தின் செயலாளராகவும், மரியாயின் சேனை ஆன்மீக இயக்குனராகவும், வைத்தியசாலை, சிறைக் கைதிகளின் இயக்குனராகவும் பணி புரிந்த அனுபவங்கள் என்னுடைய குருத்துவ வாழ்வின் அர்த்தத்தை மெருகூட்டி நிற்கின்றன.

மேலும் மலையகத்தில் பணிபுரிந்த வாழ்வை மறக்கமுடியாது. அது ஒரு வித்தியாசமன பணித்தளம். அமலமரித்தியாகிகளின் விருதுவாக்கிற்கேற்ற பணித்தளம். அதனால் தான் என்னுடைய புத்தகம் ஒன்றில் ""மலையகத்திற்கு வாருங்கள், வாழ்ந்து பாருங்கள்"" என்ற அழைப்பை விட்டிருந்தேன்.

**கேள்வி :- பணிவாழ்வில் நீங்கள் சந்தித்த சவால்கள் எதிர்பார்த்த எதிர்பாராத நிகழ்வுகள் சுவாரசியமாக இருந்ததா கொஞ்சம் சொல்லுங்களேன்?**

பதில்:- சவால்கள் என்னும் போது J.R.S சமூக பணி யுத்த காலத்தில் யாழ்ப்பாணத்திலும் திருகோணமலையிலும் செய்திருந்த போது பல சவால்களை சந்தித்திருந்தேன். ஆனால் அவை மகிழ்ச்சியான, நிறைவான நினைவுகளாக விட்டு அகன்றன.

புல்மோட்டை அகதி முகாமில் மக்கள் சந்தித்த அவலங்கள் இன்னும் மறக்க முடியாதவை. பணித்தளத்தில் நடைபெற்ற நகைப்பிற்குரிய பல விடையங்கள் நினைவில் இருக்கின்றன.

பாகிஸ்தானில் அவர்களுடைய மொழியைக் கற்பதற்கு முன்பு எனக்கு தெரிந்த மொழியில் கதைத்ததும் சிரிப்பாக இருக்கின்றது.

**கேள்வி :- அருட்பணியாளர் அவர்களே வைத்தியசாலையிலும், சிறைச்சாலையிலும் பணியாற்றிய உங்கள் அனுபவத்தில் உங்கள் மனதை உருக்கிய சம்பவமொன்றை எங்களோடு பகிர்ந்து கொள்வீர்களா?**

பதில்:- என்னுடைய சொந்த திருகோணமலை மறைமாவட்டத்திற்கு மூன்றாம் முறை பணிபுரிய வந்திருந்தேன். அந்த நேரத்தில் இந்த புதிய பணி என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தப் பணி எனக்கு புதிய பணியாக இருந்தது. ஆனால் இறங்கி வேலை செய்யக் கூடியதாகவும் இருந்தது. இதற்கு என்னுடைய மறைமாவட்ட ஆயர் கிறிஸ்ரியன் நோயல் அவர்களும் குரு முதல்வர் அருட்தந்தை கின்ஸிலி றொபட், மறைமாவட்டக் குருக்கள் துறவறத்தோர், மற்றும் என்னுடைய அமலமரித்தியாகிகள், நான் பணிபுரிந்த பங்கு மக்கள், கத்தோலிக்க தாதியர்கள், வைத்தியசாலை சிறைச்சாலை நிர்வாகம் பூரண ஒத்துழைப்பை வழங்கி இருந்தனர்.

வைத்தியசாலையில் சிகிச்சையின் பின்பு போக்குவரத்திற்கும் வெளியில் குறிக்கப்பட்ட மருந்தை வேண்டுவதற்காகவும் அல்லல்படும் நோயாளிகளைப் பார்க்கும் போது கவலை வரும். அந்நேரத்தில் வட மாகாண அமலமரித்தியாகிகள் சபையின் ஒத்துழைப்போடு என்னால் இயன்ற உதவியை வழங்கி இருக்கின்றேன்.

மேலும் சிறைச்சாலைகளில் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெறும் கைதிகளை சந்தித்த வேளையில் அவர்களின் குடும்ப பிண்ணணியை கேட்கின்ற போது கவலையாக இருக்கும். இதற்கான சில தீர்வுத் திட்டங்களை தீட்டிக் கொண்டிருந்தேன். அமலமரித்தியாகிகள் இலங்கையில் சிறப்பாக வடக்கு, கிழக்கில் பல்வேறு மறைமாவட்டங்களில் இப்பணியை மேற்கொள்கின்றார்கள். இவை என்னுடைய பணிக்காலத்தில் இன்னும் தரமுயர்த்தப்பட்ட பணியாக உயர்வதற்கு என்னால் இயன்ற முயற்சியை மேற்கொள்வேன்.

**கேள்வி :- அமல மரித்தியாகிகள் சபைக்கு யாழ்ப்பாண முதல்வராக தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் இந்த தெரிவு குறித்து அறியக்கிடைத்த போது உங்கள் உள்ளத்தில் எழுந்த எண்ணம் என்ன?**

பதில்:- மிகவும் ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் இருந்தது. ஆனால் கடவுளின் அன்பை இன்னும் அதிகமாக உணரக் கூடியதாக இருந்தது. அமலமரித்தியாகிகள் சபையின் மீதுள்ள மதிப்பும் பற்றும் இன்னும் உயர்ந்திருந்தது.

எனெனில் அமலமரித்தியாகிகள் சபை என்பது புகழ் பெற்ற பிரசித்தி பெற்ற சர்வதேச துறவற சபைகளில் ஒன்றாக இருக்கின்றது.

எங்களுடைய ஸ்தாபகர் புனித இயுஜின் டீ மசனட் வாழ்ந்த காலத்தில் 1847ம் ஆண்டு ஆரம்பித்த அமலமரித்தியாகிகளின் வரலாற்றில் வட மாகாணத்தில் 8வது முதல்வராக வந்ததை இறைவனின் ஆசீர்வாதமாக கருதுகின்றேன். ஏனெனில் இதை நான் எதிர்பார்க்கவில்லை நீண்ட இடைவெளியின் பின்பு என்னுடைய சொந்த மறைமாவட்டமாகிய திருகோணமலைக்கு பணிக்காக அனுப்பப்பட்ட வேளையில் அங்கே முன்முரமாக பணியை செய்து கொண்டிருந்த வேளையில் தான் இவ் அழைப்பு வந்திருந்தது.

**கேள்வி :- யாழ்ப்பாண மாகாணத்தின் அமல மரித்தியாகிகள் சபைக்கு கிழக்கு மாகாணத்திலிருந்து முதலாவது முதல்வராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் இது பற்றி உங்களது கருத்து என்ன?**

பதில்:- அமலமரித் தியாகிகள் சபை என்பது ஒரு சர்வதேச துறவற சபை. நாங்கள் எங்கெல்லாம் அனுப்பப்படுகின்றோமோ அங்கெல்லாம் பணி செய்ய வேண்டும். ஆண்டவர் இயேசுவின் இறுதி அழைப்பும் இது தான். "உலகெங்கும் சென்று படைப்பிற்கெல்லாம் நற்செய்தியை அறிவியுங்கள்" ஆகவே இந்த அழைப்பு இடம், மொழி, நிறம், பிரதேசம் அனைத்தையும் கடந்து பணி புரிவதற்கான அழைப்பாகவே கருதுகின்றேன். இது அனைவருடைய எதிர்பார்ப்பாகவும் உள்ளது. நான் என்னுடைய அழைப்பை பதவியாக கருதவில்லை பணியாகவே கருதுகின்றேன். இது என்னுடைய அமலமரித்தியாகிகள் குடும்பத்தோடு நிறைவாகவும், மகிழ்வாகவும் பணி வாழ்வில் பயணிப்பதற்கு உதவியாக இருக்கும்.

**கேள்வி :- பல சவால்கள் நிறைந்த இக் காலத்தில் பொறுப்புமிக்க இப்பணியை ஏற்றுள்ளீர்கள் இந் நிலையில் சபைக்கான உங்கள் எதிர்கால திட்டங்கள் செயற்பாடுகள் குறித்து ஏதாவது எமது வாசகர்களுக்காக சொல்ல முடியுமா?**

பதில்:- அமலமரித்தியாகிகள் இலங்கைத் திருச்சபைக்கு மிகவும் செறிவான பங்களிப்பை செய்திருக்கின்றார்கள். மற்றும் இன்னும் செய்துகொண்டிருக்கின்றார்கள். 1847ம் ஆண்டு இலங்கையில் அமலமரித்தியாகிகள் முதன்முதலாக கால்பதித்ததில் இருந்து ஸ்தாபகரின் "எளியோருக்கு நற்செய்தி அறிவிக்க" என்ற விருது வாக்கிற்கேற்ப பல் முகம் கொண்ட ஏழைகள் அடையாளம் காணப்பட்டு நற்செய்தி அறிவிக்கப்பட வேண்டும். இன்றைய covid19 தாக்கத்தினாலும் பன்முகம் கொண்ட ஏழைகள் உருவாகிக் கொண்டிருக்கின்றார்கள். இவர்களுக்கான பணியை தேட வேண்டும். அமலமரித்தியாகிகளின் பாரம்பரிய பணிகளான கல்வி, மறைபரப்பு, காலத்தின் தேவை கருதி விசேடமாக உருவாக்கப்பட்ட பணிகள் தொடரப்பட வேண்டும். இவை எல்லாம் என்னுடைய எதிர்கால திட்டங்களுக்குள் இறை துணையோடு உள்வாங்குவது எனது விருப்பமாக உள்ளது. மேலும் துறவறத்தாரின் பிரசன்னமும் பங்களிப்பும் ஒவ்வோரு மறைமாவட்டத்திற்கும் இன்றி அமையாதது என்பதை புரிந்து கொண்டு மறைமாவட்ட சுதேச குருக்களோடு பணிபுரிவதற்கு அழைப்பையும் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி :- அருட்பணியாளர் அவர்களே அ.ம.தி யின் யாழ்ப்பாண முதல்வராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் என்ற நற்செய்தி திருகோணமலை மறைமாவட்டத்தில் பணியிலிருக்கும் போது தங்களுக்குக் கிடைத்தது. அந்த வகையில் தங்களுக்கான திருகோணமலை மறைமாவட்ட ஆயரின் ஆலோசனைகள் அறிவுரைகள் எவ்வாறு அமைந்தன?**

பதில்:- மறை மாவட்டத்தில் பணிபுரிகின்ற வேளையில் ஆயருடனும் குருமுதல்வருடனும் ஏனைய குருக்கள் துறவறத்தாருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கின்றேன். May14,2020 மாலை 4:05 போல் உரோமாபுரியிலிருந்து வந்த தொலைபேசியின் போது என்னுடைய பணி அறிவித்த போது சில தீர்மானங்களை எடுப்பதற்காக என்னுடைய யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஆன்மீக குருவை தொடர்பு கொள்ள முடியாத நிலையில் என்னுடைய ஆயரையும் குருமுதல்வரையும் தொடர்பு கொண்டேன். மேலும் ஆயரை நேரில் சென்று சந்தித்து சில ஆலோனைகளைப் பெற்றுக்கொண்டேன். அவர்களின் ஆலோசனைக்கும் செபங்களுக்கும் எனது நன்றிகள்.


**கேள்வி :- அமல மரி அன்னையின் அரவணைப்பும் பாசமும் உங்களில் மிளிர்ந்துள்ளதை நீங்கள் உணர்ந்துள்ளீர்கள். அந்த வகையில் அமமைரி அன்னையைப் பற்றிப் பகிர்ந்து கொள்ளுங்களேன்?**

பதில்:- மரி அன்னை மீது அதிக பக்தி கொண்டவன் நான். நாளாந்தம் மூன்று செபமாலை சொல்வதை வழமையாகக் கொண்டவன். மரி அன்னை எல்லோருக்கும் அன்னை அதிலும் அமலமரித்தியாகிகளின் பாதுகாவலியாக இருந்து வழி நடத்துகின்றாள். மரி அன்னையிடம் நாங்கள் எதை உருக்கமாகக் கேட்டாலும் எமக்காக அதை இறைவனிடத்தில் பரிந்து பேசி பெற்றுத் தருபவள்.

**கேள்வி :- நீங்கள் நீரோடைப் பத்திரிகையின் ஆசிரியாராகப் பணியாற்றியுள்ளீர்கள் ஒரு பத்திரிகை ஆசிரியரின் நோக்கம் எதுவாக அமைய வேண்டும் என நீங்கள் விரும்புகின்றீர்கள்?**

பதில்:- நீரோடைப் பத்திரிகையின் ஆசிரியராக பணியாற்றியதை பெரும் கௌரவமாகக் கருதுகின்றேன். இது ஒரு கத்தோலிக்கப் பத்திரிக்கை. இந்தப் பத்திரிக்கை ஏறக்குறைய 18 ஆண்டுகளை கடந்திருக்கிறது. அதில் ஏறக்குறைய 13 1/2 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றி இருக்கின்றேன். மேலே சொல்லப்பட்ட பணித்தள சேவைகளோடும் ஏனைய பணிகளோடும் பல கஸ்டங்கள் மத்தியில் ஒரு நேர்த்தியான பத்திரிக்கையை வெளியிட்டு வந்ததையிட்டு பெருமைப்படுகின்றேன்.

- பொதுவாக பத்திரிக்கை தர்மம் பேணப்பட வேண்டும் அதனால் தான் என்னவே இத்தனை ஆண்டுகள் ஆகியும் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் எதுவித எதிர்மறையான கருத்துக்களும் முன்வைக்கப்படவில்லை. அதேவேளை அதிக மக்களின் ஆதரவைப் பெற்ற பத்திரிக்கையாகவும் அது இருந்து வருகின்றது.
- கத்தோலிக்க பத்திரிக்கையாயின் கத்தோலிக்க விழுமியங்கள் கத்தோலிக்க விசுவாசம் கத்தோலிக்க ஒழுக்கம் சார்ந்த பண்புகள் பேணப்பட வேண்டும்.
- இளம் எழுத்தாளர்கள் ஏனைய எழுத்தார்வம் மிக்கவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும்.



**கேள்வி :- உடனே நினைத்தும் உங்கள் உள்ளத்தை விட்டு நீங்காத நினைவு பற்றி கூறுங்களேன்?**

பதில்:- என்னுடைய பெற்றோரின் இறப்பு.

- என்னுடைய மூன்றாவது சகோதரன் லீனஸ் அவர் வாழ்ந்த காலத்தில் குருவாக வர எண்ணியிருந்தார். அவரின் இறப்பின் பின்பு நான் குருவாக வர வேண்டும் என்ற எண்ணம் என்னில் எழுந்தது. இது எவ்வாறு எழுந்தது என்று தெரியாது. இது தான் இறை பராமரிப்பு என்று சொல்வதோ எனக்குத் தெரியாது!

**கேள்வி :- COVID-19 தொற்று நோயினால் ஏற்பட்டுள்ள இம் முகமூடி (MASK) கலாச்சாரம் பற்றி உங்கள் கருத்தை அறிந்து கொள்ள விரும்புகின்றோம்?**

- குற்றவாளிகளை அடையாளம் காண முடியாது. (சிரிப்பு........)
- நீ என்னையும் நான் உன்னையும் பார்க்க முடியாது. (காதலர்களுக்கு ஒரு திண்டாட்டம்...)
- கூடக் கதைத்து திரிந்தவர்கள் குறைந்து விட்டார்கள்.


இனியாவது செயல் திறன் கூடட்டும். முயற்சிகள். பெருகட்டும். நோயற்ற ஆரோக்கியமான வாழ்க்கை தொடரட்டும்.

**திருமலை தீபத்திற்கு எனது நன்றிகள்**

செவ்விகண்டவர் - செல்வி. கிரிஷாந்தா குரூஸ்

யாழ் அமலமரித்தியாகிகள் சபைக் குருக்கள் அனைவருக்கும் புதியதாகப் பொறுப்புகளை ஏற்கவுள்ள அருட்பணி. பெலிக்ஸ் டூஜின் அவர்களுக்கும் திருகோணமலை மறைமாவட்டத்தின் சார்பாக திருமலைதீபத்தின் செபத்தோடு கூடிய வாழ்த்துக்கள். அன்னை மரியாவின் பரிந்துரை உங்கள் பணிவாழ்வில் தொடர்ந்தும் பணிக்கட்டும் என்று வாழ்த்துகிறோம்.

# புனித பியோ



- பியட்ரல்சினா நகரின் புனிதர் - புனித பியோ அடிகளார்
- 1887/05/25ல் இத்தாலியின் பியட்ரல்சினாவில் விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்.
- அங்கிருந்த சிற்றாலயத்தில் தனது சிறுவயதில் பீடப்பணியாளராக இருந்து திருப்பலியில் குருவுக்கு உதவி செய்தார்.
- இவருக்கு மைக்கல் எனும் அண்ணனும் பெலிசிட்டா. பெலக்ரீனா, க்ராசியா ஆகிய 3 தங்கைகளும் இருந்தனர்.
- பக்தியுள்ள இவரது குடும்பத்தினர் தினந்தோறும் திருப்பலியில் பங்கேற்றதுடன் இரவில் செபமாலை செபிப்பதையும் வாரத்தில் மூன்று நாட்கள் மாமிச உணவைத் தவிர்ப்பதையும் வழக்கமாகக் கொண்டு வாழ்ந்தனர்.
- புனித பியோ சிறுவயது முதலே பக்தியில் சிறந்து விளங்கியவர்.
- 1903/01/06 அன்று தனது 15ம் வயதில் மொர்கோனில் இருந்த கப்புச்சின் சபையில் நவசந்நியாசியாக நுழைந்தார்.
- புனித 5ம் பத்திநாதரின் பெயரைத் தனது பெயராக ஏற்று ஏழ்மை. கற்பு. கீழ்ப்படிதல் ஆகிய துறவற வாக்குறுதிகளை எடுத்துக் கொண்டார்.
- இவர் ஒப்புரவு அருட்சாதனம் வழங்கிக் கொண்டிருந்த வேளையில் இயேசுவின் ஐந்து திருக்காயங்களையும் தனது உடலில் பெற பேறுபெற்றார்.
- அவற்றிலிருந்து சிந்திய இரத்தம் இனிமையான மணம் வீசியது. அன்று முதல் இறக்கும் நாள் வரை காயங்களால் வேதனையடைந்தார்.
- 1960ல் பியோவின் உடல்நலம் குன்றத் தொடங்கிய போதும் ஆன்மீக பணிகளில் ஈடுபட்டார்.
- 1968 /09/22 தனது இறுதி திருப்பலியை நிறைவேற்றினார்.
- 1968 /09/22 செபமாலையை கையில் பிடித்தவாறும் "இயேசு மரியா" என்ற திருப்பெயர்களை உச்சரித்தவாறும் தனது 81 வயதில் பியோ மரணம் அடைந்தார்.
- பியோ இறந்த போது இவரது காயங்கள் அனைத்தும் சுவடின்றி மறைந்து விட்டன.
- திருத்தந்தை 2ம் ஜோன் போல் இவருக்கு 1999ம் ஆண்டு அருளாளர் பட்டமும் 2002 ஜுன் 16ம் நாள் புனிதர் பட்டமும் வழங்கினார்.
- இவர் இறந்து 40வது ஆண்டில் இவரது கல்லறை தோண்டப்பட்ட போது பியோவின் உடல் அழியாத நிலையில் காணப்பட்டது.
- பியோவின் உடல் சான் ஜியோவானி டிராட்டொண்டோ அருகிலுள்ள புனித பியோ ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**"புத்தகங்கள் வழியாக கடவுளைத் தேடும் ஒருவர் தியானத்தின் மூலம் அவரைக்கண்டு கொள்ள முடியும்"** புனித பியோ அடிகள்

**ஊக்குவிப்பாளர் - செல்வநாயகபுரம்**

# புனித பீட்டர் தமியான்



- பீட்டர் தமியான் 1007 ஆம் ஆண்டு இத்தாலியில் இருக்கும் ரவென்னா என்ற இடத்தில் வாழ்ந்த ஓர் ஏழைத் தம்பதிக்கு இளைய மகனாக பிறந்தார். தன்னுடைய மூத்த சகோதரரும் குருவாகவும் இருந்த தமியான் மீது கொண்டிருந்த மதிப்பினால் பெற்றோர் இட்ட பீட்டர் என்ற தன் பெயரோடு தமியான் என்ற பெயரையும் இணைத்து பீட்டர் தமியான் என மாற்றிக்கொண்டார். பீட்டர் சிறுவயதிலே-யே பெற்றோரை இழந்தார். தன்னுடைய இளைய சகோதரரின் கண்காணிப்பில் வளர்ந்தார். இந்த சகோதரர் மிகவும் கண்டிப்பானவர். பீட்டரை சரியாகக் கவனிப்பதும் கிடையாது. தான் வைத்திருந்த பன்றிகளை மேய்ப்பதற்குத் தான் இவர் பீட்டரை அனுப்பி வைத்தார். இந்த நேரத்தில் பீட்டர் மிகவும் கஷ்டப்பட்டார். இச்செய்தியைக் கேள்விப்பட்ட பீட்டரின் மூத்த சகோதரன் தமியான் அவரை பள்ளிக்கூடத்திற்குச் சேர்த்தார். அதற்கான செலவுகள் அனைத்தையும் தான் ஏற்றுக்கொண்டார்.

பீட்டர் நன்றாகப் படித்து ஒரு பேராசிரியராக உயர்ந்தார். தன்னுடைய பெயரோடு சகோதரரின் பெயரை சேர்த்துக் கொண்டு பீட்டர்தமியான் எனமாற்றிக் கொண்டார். தன்னுடைய மாணவர்களுக்கு மிகச்சிறப்பான கல்வியை வழங்கினார். இத்தகைய தருணத்தில் தான் தூயஆசீர்வாதப்பர் சபையைச் சேர்ந்த துறவிகள் இவரை வந்து சந்தித்து இவருக்கு கிறிஸ்துவை பற்றியும் துறவு வாழ்க்கை குறித்தும் எடுத்துரைத்தார்கள். இவற்றால் ஈர்க்கப்பட்ட பீட்டர்தமியான் தூயஆசீர்வாதப்பர் சபையிலே துறவியாக மாறினார்.

தூய ஆசீர்வாதப்பர் சபையில் சேர்ந்த சில ஆண்டுகளிலேயே தலைவரானார். சபையில் பெரும் மாற்றங்களைக் கொண்டுவந்தார். ஐந்து துறவற மடங்களை நிறுவி இளைஞர்கள் துறவு வாழ்வில் ஈடுபடுவதற்கு முக்கியக் காரணமாக இருந்தார். இவருடைய பணிகளை பார்த்த மேலிடம் இவரை ஒஸ்தியா என்ற இடத்தில் ஆயராக நியமித்தது. ஆயராக உயர்ந்த பிறகு பீட்டர்தமியான் அளப்பெரிய பணிகளைச் செய்தார்.

இவையெல்லாவற்றையும் பார்த்த அப்போதைய திருத்தந்தை ஒன்பதாம் ஸ்டீபென் என்பவர் இவரை திருத்தந்தையின் திருத்தூதராக நியமித்தார் பீட்டர்தமியான் ஒரு மிகச்சிறந்த சமாதானத்தின் தூதுவராக விளங்கினார். திருச்சபையிலும் நாடுகளிடையேயும் அமைதியை ஏற்படுத்த நல்ல ஒரு கருவியாக விளங்கினார். ஜெபிப்பதற்கு நேரம் ஒதுக்கத் தவறியதே இல்லை அன்னைமரியிடம் அளவு கடந்த பக்தி கொண்டிருந்தார். ஒரு பேராசிரியராக, ஆயராக, திருத்தந்தையின் தூதராகப் பணிபுரிந்த பீட்டர்தமியான் ஓரிடத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை நடத்திவிட்டுத் திரும்பும் போது வரும் வழியில் 21.02.1072ல் இறந்துபோனார். பன்னிரண்டாம் லியோ திருத்தந்தை 1828 ஆம் ஆண்டு புனிதராக இவரை உயர்த்தினார். பீட்டர்தமியானிடம் தீராத தலைவலிக்காக மன்றாடும் போது விரைவிலே குணமடையும் என்பது நம்பிக்கை

*அ.நி. ஜெய்சி அனித்தா*
*தம்பலகமம் (கப்பல்துறை)*

"எப்போதுமே அன்பை செய்யாமல் மடிவதைவிட, அன்புசெய்து தோற்றுப்போவது மேல்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏதேன் தோட்ட மனிதர்கள்




அன்றைய உரோமை பேரரசில் திருமணம் என்பது ஒரு பொருட்டாக கருதப்படாத ஒரு விடயமாகும். திருமணம் புரியாமல் தனிமையில் வாழ்ந்து எவ்வித அர்ப்பணிப்பும் இன்றி இன்பத்தில் தளைத்திருக்கவே உரோமையர்கள் விரும்பினார்கள். அத்தோடு கருக்கலைப்பு, குழந்தைகள் கொலை, ஓரினச் சேர்க்கை என்பன பரவலாக காணப்பட்ட காலக்கட்டமாகும். திருமணம், காதல், பாலுறவு ஆகியன தனித்துப் பிரித்துப்பார்க்க முடியாத இறைவனின் கொடைகளாகும். அவை மூன்றும் ஒன்றாக நோக்கப்பட வேண்டும். ஆனால் உரோமைக் கலாசாரத்தில் இவைகள் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாமல் இருந்தன. இச்சூழ்நிலையில் இயேசு உண்மையை சொல்ல தயங்கவில்லை. பரிசேயர்கள் கேட்ட கேள்விக்கு திருமணம் பற்றி மட்டுமல்ல மணத்துறவு பற்றியும் எடுத்துச் சொன்னார். தொடக்கத்திலேயே மனிதனை இறைவன் ஆணும் பெண்ணுமாக படைத்தார். ஆகவே "மனிதன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டு தன் மனைவியோடு ஒன்றித்து இருப்பான். அவர்கள் ஒரே உடலாய் இருப்பார்கள்". என்று கூறினார். இறைவன் ஆதாம் ஏவாளை ஓர் உடலாய் ஒன்றித்து வாழ படைத்தார், அவர்கள் இருவரும் தங்கள் வாழ்க்கையை ஒருவரோடு ஒருவர் பகிர்ந்துக்கொண்டார்கள் (Self Giving). ஆகவே கடவுள் மனிதனை படைத்தது ஒரு திட்டத்தோடும், நோக்கத்தோடும் ஆகும். மனிதனை படைப்பதற்கு அவர் மனதில் இவ்வாறான சிறப்பான நோக்கம் இருந்தது. குடும்ப வாழ்வுக்கென்றே இறைவன் மனிதனை படைத்தார் குடும்பமாக வாழ்வது என்பது இறைவனின் திட்டமாகும். ஆணும் பெண்ணும் தன் எதிர்பாலாரோடு ஒருடலாய் (One Flesh) கணவன் மனைவியாய் இருப்பது இறைவனின் அழைப்பாகும். அது இறைவனின் உன்னத கொடையாகும். திருமணம் என்பது மனிதனின் கண்டுப்பிடிப்பல்ல மாறாக அது இறைவனின் பரிசு ஆகும். ஆகவே இதனை விபரிக்க திருத்தந்தை 2ம் ஜோன் போல் அவர்கள் மனிதனின் முன்முதல் அனுபவங்களை கோடிட்டு காட்டுகின்றார்.

அவையாவன:

1. முதல் தனிமை
2. முதல் ஒன்றிப்பு
3. முதல் ஆடையின்மை (நிர்வானம்)
4. முதல் பாவம்

திருத்தந்தை அவர்கள் மனிதனின் வீழ்ச்சிக்கு முன் மனிதன் வாழ்ந்த வாழ்க்கைக்கு எங்களை அழைத்து செல்கின்றார். வீழ்ச்சிக்கு முன் மனித அனுபவங்களை ஆராயும் போது மனித வாழ்விற்கும், மனித பாலுறவிற்கும் நோக்கம், அர்த்தம் ஆகியன இருந்தன என்பது



புலனாகின்றது. முதல் பாவத்தினால் நாம் அருளை இழந்த போதிலும் இயேசுவின் மீட்பு செயலால் முதல் மூன்று அனுபவங்களை மீளபெற வாய்ப்பு பெறுகிறோம். முதல் தனிமை, முதல் ஒன்றிப்பு, முதல் நிர்வானம் ஆகியன நேர்மறையான அனுபவங்களாகும். முதல் பாவம் எதிர்மறையான அனுபவமாகும். கிறிஸ்தவர்களாகிய நாம் முதல்பாவம் அல்லது சென்ம பாவம் அதன் விளைவுகள் பற்றி நன்கு அறிந்திருக்கின்றோம். ஆனால் மற்றைய முன்று அனுபவங்கள் பற்றிய தெளிவான அறிவு எம்மிடம் இல்லை. "தொடக்கத்திலே" (மத்தேயு 19:4) என்கின்ற இயேசுவின் மேற்கோளை திருத்தந்தை ஜோன் போல் அவர்கள் பாலுறவு, மனித உடல், திருமணம் ஆகியவற்றின் நோக்கத்தை எடுத்துக்காட்ட ஏதேன் தோட்டத்திற்கு எம்மை அழைத்து செல்கின்றார். இம்முதல் அனுபவங்கள் தொடக்கநூலின் முதல் 2 அதிகாரங்களில் நாம் காணலாம். அங்கே மனிதனுக்கும் இறைவனுக்கும் இடையில் மிக நெருக்கமான உறவு நிலவுகின்றது. இறைவனோடு இருந்த உறவு முழுமையாய் இருந்தது. அதுபோல் ஆதி மனிதனுடைய உறவுகளும் முழுமையாய் இருந்தன இறைவன் அமைத்தது, அவர் திட்டமிட்டது அவ் உறவுகளில் வெளிப்பட்டன. இந்த உறவுகளை விபரிக்க திருத்தந்தை 2ம் ஜோன் போல் தொடக்கநூல் 2:15-25 வரையிலான திருவிவிலிய பகுதியை பயன்படுத்துகின்றார்.

### முதல் தனிமை

திருவிவிலியத்தில் படைப்பின் கதைகள் 2 தடவைகள் குறிப்பிடப்படுகின்றன. முதல் கதை தொடக்கநூல் 1:1-31, இரண்டாம் கதை தொடக்கநூல் 2:4-24 ஆகிய பகுதிகளில் குறிப்பிடப்படுகின்றன. முதலாவது படைப்பின் கதை முடியும் இடத்திலிருந்து இரண்டாம் கதை ஆரம்பமாகின்றது. இரண்டு கதைகளும் வெவ்வேறு நோக்கங்களை கொண்டது. ஆனால் ஒரே உண்மையை எடுத்துரைக்கின்றன. அதாவது கடவுள் மனிதனை ஒன்றுமில்லாமையிலிருந்து படைத்தார். இறைவன் உலகை படைத்த போது அதை பார்க்க யாரும் இருக்கவில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தொடக்கநூலை கவிவடிவில் எழுதினர். ஆனாலும் தொடக்கநூலில் முதல் இரு அதிகாரங்களும் பல்வேறு இறையியல் உண்மைகளை எமக்கு கற்றுக் கொடுக்கின்றனர்.

முதல் தனிமை 2ம் படைப்பின் கதையில் காட்டப்படுகின்றது. "மனிதன் தனியாக இருப்பது நல்லதல்ல. அவனுக்கென்று தகுந்த துணையை உருவாக்குவேன்". (தொ நூல் 2:18) என்கிற வார்த்தைகள் மனிதனின் முதல் தனிமையை பற்றிய சிந்தனைகளை ஆரம்பிக்கின்றன. தொடக்கநூலில் முதல் மனிதருக்கு பயன்படுத்தப்படும் "ஆதாம்" என்கின்ற எபிரேயச் சொல் இருபாலாருக்கும் பயன்படுகின்ற ஒரு பொதுப்பெயராகும். "ISH" என்கிற வார்த்தை ஆணுக்கும் "ISHSHAH" என்கிற சொல் பெண்ணுக்கும் பயன்படுத்தப்படுகின்றது. ஆகவே, முதல் தனிமை இருபாலாருக்கும் பொதுவானதாகும். நான் ஒரு ஆண் அல்லது ஒரு பெண் என்கிற இருபால் உணர்வுக்கு முற்பட்டது. 2ம் படைப்பின் கதையில் கடவுளின் பெயர் 6 தடவைகள் குறிப்பிடப்படுகின்றன. இறைவனும் மனிதனும் நெருங்கிய நண்பர்கள் போல் இருந்தார்கள். ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள்.

ஒருவர் மற்றவர்களுடைய குரலை கேட்டுக்கொண்டார்கள் ஆனால் ஏதேன் தோட்டத்தில் மனிதன் மற்ற எல்லா உயிர்களையும் விட வித்தியாசமாய் காணப்பட்டான். உண்மையில் மனிதனுக்கு ஒரு துணை தேவை என்று கண்ட இறைவன் மனிதனிடம் எல்லா விலங்குகளையும் கூட்டி வந்தார். மனிதனே அவற்றிற்கு பெயர் சூட்டினான். இவ்வாறு பெயர் சூட்டுவதன் மூலம் அவன் அவற்றின் மீது தனது ஆளுமையை வெளிப்படுத்துகின்றான். இவ்வாறு மனிதன் மற்றைய விலங்குகளுக்கு பெயர் இடும் ஆற்றலானது அவ்விலங்குகள் மேல் அவனுக்குள்ள ஆதிக்கம் செலுத்தும் ஆற்றலை குறித்துக்காட்டுகிறது. நிலத்தை பண்படுத்துதல், பெயரிடுதல் போன்ற செயற்பாடுகள் மனிதனின் தனித்தன்மையையும் அவன் இயல்பு, சுதந்திரம், தெரிவு செய்யும் ஆற்றல் என்பவற்றை படம் பிடித்துக்காட்டுகின்றன. உயிருள்ள ஒவ்வொன்றுக்கும் அவன் என்ன பெயரிட்டானோ அதுவே அதன் பெயராயிற்று. (தொநூ.2:19) படைப்பு அனைத்தின் மீதும் மனிதனுக்குள்ள கீழ்படுத்தும் வல்லமை ஆண் பெண் இருபாலாருக்கும் பொதுவானது. (தொ.நூ.1:28) திருவிவிலியத்தில் இப்பகுதியில் மனிதன் உயிர்களுக்கு பெயர் சூட்டுவதையும், கடவுள் படைத்த அவ் உயிரினங்களை மனிதன் அவதானிப்பதையும் காண்கிறோம். அவ்வேளையில் மனிதன் தான் மற்றைய விலங்குகளைவிட வேறுப்பட்டவன் என்பதை உணர்ந்தான். அது அவனது தனிமையை குறித்துக்காட்டுகின்றது. அவனுக்கு ஒரு துணை இருக்கவில்லை என்பதையும் எடுத்துக் கூறுகின்றது.

தொடரும்...

அருட்பணி. கிறிஸ்டி போல்
கண்டி மறைமாவட்டம்

---


# "வியத்தகு முறையில் நீர் என்னைப் படைத்துள்ளீர்" தி.பா. 139,14

தொகுப்பு :- செல்வி. M.D. அந்தோனிப்பிள்ளை

பல வருடங்களுக்கு முன்னால் ஜேர்மனியில் வசித்து வந்த மிகச்சாதாரண குடும்பமொன்றில் ஒரு குழந்தை பிறந்தான் பிறக்கும் போதே "ஆட்டிசம்" **(Autism)** நோயுடன் பிறந்த அவன் தன் நான்காவது வயதிலும் பேச்சாற்றல் இல்லாமலே வளர்ந்தான் தனது ஐந்தாவது வயதில் பேச ஆரம்பிக்கும் போது அவனால் வார்த்தைகளைக் கோர்லையாக்க முடியவில்லை. மிக மெதுவானதாக ஒரே வார்த்தைகளைத் தொடர்ந்தும் மீட்டிக்கொண்டேயிருந்த அவன் பேச்சு நிச்சயம் அடுத்தவரைக் கவருவதாக இல்லை. இதனால் பாடசாலையில் அவனுக்கு நண்பர்கள் குறைவு எந்த ஆசிரியருக்கும் அவனைப் பிடிக்கவில்லை. அவனைச் சுற்றியிருந்த அனைவரும் அவனை ஓர் மனநோயாளியாகவே பார்த்தனர்.

அவன் தனது பாடசாலைக் காலம் முழுவதையும் ஒரு அடி முட்டாள் என்ற பெயரோடேயே கழித்தான். உயர்தரப் பரீட்சையில் இரண்டுமுறை தோல்வியுற்றான் "இயற்பியலில்" **(Physics)** சாதிக்கவேண்டுமென்பதே அவனது கனவு. அதைத் தனது நண்பர்களிடம் கூறிய போது அனைவரும் கைகொட்டிச் சிரித்தார்கள் நீ பாடசாலையில் வாங்கிய புள்ளிகளைப் பார் இதை வைத்துக் கொண்டு நீ விஞ்ஞானி ஆவாயா?" எனக் கேலி செய்தார்கள் இக் கேலி கிண்டல்களை அவன் கண்டுகொள்ளவில்லை இயற்பியல் சம்பந்தமான பல புத்தகங்களைத் தேடிப்படித்தான். தனது அறிவை வளர்த்துக் கொண்டான் தனது கனவை நனவாக்க அப்போது ஜேர்மனியில் பிரபலமாகவிருந்த பல பல்கலைக்கழகங்களுக்கு அவன் விண்ணப்பித்தான். ஆனால் பாடசாலையில் அவன் மதிப்பெண்கள் குறைவாக இருந்ததால் எங்கும் அவன் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. தட்டுத்தடுமாறிய பல போராட்டங்களுக்குப் பின்னர் ஒரு சாதாரண பல்கலைக்கழகத்தில் படிக்க அவனுக்கு வாய்ப்புக் கிடைத்தது. இருந்தும் அவனது ஞாபகமறதி அங்கும் அவனை ஓர் முட்டாளாகவே அடையாளம் காட்டியது.

பட்டப்படிப்பு முடிந்தது இயற்பியல் சார்ந்த ஏதாவதொரு துறையில் வேலைக்குச் சேர்ந்துவிடவேண்டும் என்பதே அவனது கனவு ஆனால் அவன் வேலைக்கு விண்ணப்பித்த இடங்களிலெல்லாம் பல்கலைக்கழக மதிப்பெண்களைக் காட்டி நிராகரிக்கப்பட்டான். இறுதியில் ஒரு நிறுவனத்தில் "கிளார்க்" **(Clerk)** வேலை கிடைத்தது. தனது குடும்பத்தின் வறுமையை எண்ணிக்கொண்டான் தனது கனவுகளை மூட்டைகட்டிவிட்டு அவ்வேலையை ஏற்றுக்கொண்டான்.



இருந்தும் அவனது மனதில் புதைந்த தீராத ஆர்வம் அவனைத் தூங்கவிடவில்லை. வேலை முடிந்து வீடு திரும்பியதும் அவனது இயற்பியல் ஆய்வில் மூழ்க ஆரம்பித்தான். மூன்று வருடங்கள் கடந்தன அதே நிறுவனத்தில் அதே கிளார்க் வேலையை அவன் செய்து கொண்டிருந்தான்.

ஆனாலும் இயற்பியலில் அவனது ஆய்வு மலையளவில் வளர்ந்திருந்தது. 1905இல் இயற்பியலில் அவன் தனது முதலாவது ஆய்வை வெளியிட்டான். அதை எவருமே கண்டு கொள்ளவில்லை மனம் தளராதவன் சிறிது காலத்திலேயே அவனது இரண்டாவது ஆய்வையும் வெளியிட்டான். அன்றிருந்த எந்த விஞ்ஞானியும் ஒரு சாதாரண கிளார்க்கின் ஆய்வை ஏற்றுக்கொள்ளவில்லை. அனைவரும் கூறுவது போல தான் ஒரு உதவாக்கரை முட்டாள் தானா என்ற சந்தேகம் அவனது மனதில் வலுப்பெற்றது. நடப்பது நடக்கட்டும் என மனதைத் தேற்றிக்கொண்டு தனது 3வது ஆய்வானது "சிறப்பு சால்பியல்" கோட்பாட்டை வெளியிட்டார். அந்த ஆய்வினைக் கண்ட விஞ்ஞான உலகம் வாயடைத்துப் போனது இந்த ஆய்வானது நவீன விஞ்ஞானத்தை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்லும் என அனைவரும் புகழாரம் பாடினர்.

அதே வருடத்தின் இறுதிக் காலகட்டத்தில் தனது 27வது வயதில் தனது 4வது ஆய்வினை வெளியிட்டார். அந்த ஆய்வு அது வரையிருந்த இயற்பியல் கோட்பாட்டை மொத்தமாக மாற்றியமைத்தது இதற்கு முன்னர் இதுபோன்ற ஆய்வினை எவராலும் முன்வைக்க முடியாதென்பதையும் இதற்குப் பின்னர் இவன் போன்ற ஒரு அறிவாளி பிறக்கப்போவதில்லை என்பதையும் அறிந்திருந்த முழு உலகமும் ஏற்றுக்கொண்டது. அன்று அவன் வெளியிட்டதே இன்று இருக்கும் நவீன விஞ்ஞானத்தின் அத்திவாரமான "திணிவு ஆற்றல் சமன்பாடு" அதை வெளியிட்ட அம் முட்டாள் இளைஞனே இன்று உலகம் போற்றும் "ஆல்பட் ஐங்ஸ்டைன்" **(Albert Einstein)**

இக்கதை நிச்சயம் இவரது கதை மட்டுமல்ல இன்றைய உலகில் பல சாதனையாளர்களின் கதையும் கூட சிலவேளைகளில் இது உங்களின் கதையாகவும் கூட இருக்கலாம். உலக வரலாற்றில் அதிபுத்திசாலித்தனமான மனிதனாகக் கருதப்படும் ஐங்ஸ்டைன் 27 வயது வரை தகுதியில்லாத ஒரு முட்டாளாகவே அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் உங்களை இச்சமூகம் முட்டாள் எனக் கூறுவதும், உதவாக்கரை எனக்கூறி ஒதுக்கிவைப்பதும் மிக மிக இயல்பானதே என்பதை என்றும் மறந்துவிடாதீர்கள். ஆனால் உங்களைச் சுற்றியுள்ளவர்களின் இவ் இரைச்சல்களை எல்லாம் மனதில் ஏற்றுக்கொண்டால் நிச்சயம் உங்களின் வாழ்க்கை ஒளிமயமானதாக மாறப்போவதில்லை இறுதியாக ஐன்ஸ்டைன் கூறியதையே நானும் கூறி முடிக்கிறேன்.

இங்கு ஒவ்வொரு மனிதனுக்கும் தனித் திறமைகள் உண்டு. ஒரு மீன் வேகமாக மரமேறுவதுதான் திறமை என நம்பினால், அது தனது வாழ்நாள் முழுவதையும் ஓர் முட்டாளாகவே வாழ்ந்து மடியும் அத்தவறை நீங்களும் செய்யாதீர்கள்.

"நான் ஒருவன் தான் இருக்கிறேன் என்பதுபோல் இறைவன் எம் ஒவ்வொருவரையும் தனியான கவனத்துடன் அன்புசெய்கிறார்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12

# இன்னுமா தயக்கம்!

## உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்!

அருட்பணி. அலெக்ஸ் மரிய செல்லையா கச

அன்பு மிக்க சகோதர சகோதரிகளே!

மீண்டும் உங்களை திருமலை தீபம் வாயிலாக சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறோம். ஒவ்வொரு உயிரும் இந்த உலகில் வாழ்வதற்கு தேவையான தகவமைப்புக்களை தனக்குத் தானே உருவாக்கிக் கொள்கிறது என்பதை சென்ற இதழில் பார்த்தோம். இந்த இதழில் தகவமைப்புக்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளும் முறைகளை நாம் சிந்திப்போம்.

மற்றெந்த விலங்குகளையும் விட சிறப்பாக தன்னைத் தகவமைத்துக் கொள்வதில் மனிதன் முதலிடத்தைப் பெறுகிறான். ஏனெனில் அனைத்து விலங்குகளையும் விட சிறந்த உடலமைப்பை மனிதன் மட்டுமே பெற்றுள்ளான். எந்த வேலையையும் சிறப்பாக செய்ய வடிவமைக்கப்பட்ட கை விரல்கள், கால் பாதங்கள், சிறப்பாக சிந்திக்கும் திறன் பெற்ற மூளை என்று மனிதனின் சிறப்பம்சங்களை நாம் அடுக்கிக் கொண்டே போகலாம். மிகவும் முதிர்ச்சியடைந்த வடிவமைப்பாக மனித உடலின் வடிவமைப்பை நாம் பார்க்கலாம். வேறெந்த உயிருக்கும் இல்லாத பல சிறப்பியல்புகள் மனிதனுக்கு மட்டுமே இருப்பதை நாம் பார்க்கின்றோம். எனவே தான் இறைவனின் படைப்பின் உச்சம், மனிதன் என்கிறோம். எனவே மற்ற உயிர்களை விட மனிதர்களாகிய நாம் மிக எளிதாக ஒரு சூழ்நிலைக்கு தக்கவாறு நம்மை தகவமைத்துக் கொள்ள முடியும் என்றால் அது மிகையாகாது.



ஆனால், மற்ற உயிர்களை விட மனிதனே இந்த உலகில் அதிகமான பிரச்சனைகளை வளர்த்துக் கொண்டிருக்கின்றான் என்றால் அதையும் மறுக்க முடியாது. இதற்குக் காரணம் என்ன? மற்ற உயிர்களை விட மேம்படுத்தப்பட்ட வாழ்க்கை முறையை மனிதன் மட்டுமே கொண்டுள்ளான். இந்த உலகின் பெரும்பகுதியை மனிதன் தான் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றான். கடல்களைக் கூட எல்லை பிரித்து அளந்து வைத்திருக்கின்றான். மனிதன் கால்படாத இடமே இந்த உலகத்தில் இல்லை என்று கூட சொல்லலாம். இருந்தாலும், மனிதனுக்கு மனநிறைவு என்பது ஏற்படவே இல்லை என்பதையும் நாம் மறுக்க முடியாது.

பழங்கால மனிதன் தன் வாழ்வில் பல சவால்களைச் சந்தித்தான். பல்வேறு மிருகங்களிடமிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும், பல இயற்கை சீற்றங்களிலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும், தன் வாழ்விடங்களில் தனக்கு பாதுகாப்பும் வசதிகளும் வேண்டும் என்பது அவனது தேவையாகவும் சவாலாகவும் இருந்தது. இவற்றிற்கு அவன் படிப்படியாக பதில்களைக் கண்டுபிடித்தான். தன்னை அதற்கேற்றவாறு தகவமைத்துக் கொண்டான். ஆதி மனிதன் குகைகளை தன் வதிவிடமாகக் கொண்டான். அதன் பிறகு சிறு குடிசைகளை அமைத்து அதில் தங்கினான். இவ்வாறு அவன் தன் வீட்டை கொஞ்சம் கொஞ்சமாக உருவமைத்து இன்று நாம் காண்கின்ற மாட மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் உருவாக்க ஆரம்பித்தான். இவ்வாறு மனிதன் கொண்டுள்ள அனைத்து அறிவியல் கண்டுபிடிப்புக்களையும் கலாச்சாரத்தையும் நாகரீகத்தையும் அவனது தகவமைப்புக்களாகவே நாம் பார்க்கின்றோம். இவை அனைத்தும், தன் வாழ்வின் சவால்களுக்கும் தேவைகளுக்கும் உருவாக்கிய பதில்களாகவே நாம் பார்க்கின்றோம்.

இத்தகைய மேன்மை தங்கிய மனிதன், ஒரு சூழ்நிலைக்குத் தக்க தன்னைத் தகவமைத்துக்கொள்ளும் அனைத்து யுக்திகளையும் அறிந்த மனிதன், ஏன் மற்ற உயிரினங்களை விட அதிக பிரச்சனைகளை வளர்த்துக் கொண்டிருக்கின்றான் என்பது சற்று வேடிக்கையான விடயமாக இருக்கின்றது. மனிதன் தன் எந்தப் பிரச்சனையையும் தன் தகவமைக்கும் சக்தியால் தான் வெற்றி கொள்கின்றான். இவ்வாறு மிக எளிதாக தகவமைத்துக் கொள்ளும் மனிதன், பல பிரச்சனைகளை சந்திக்க முடியாமல் திகைத்து நிற்பது சற்று வேடிக்கையான விடயம் தான். இத்தகைய சவால்களுக்கு "நம்பிக்கை' என்ற ஒரு வார்த்தையில் பதிலளித்துவிடலாம். நமது நம்பிக்கை எப்படி அமைந்துள்ளதோ, அதன்படியே நம் வாழ்வு அமைகின்றது.

ஒரு மனிதன் தன்னை நம்பினால், தன்னைச் சுற்றியுள்ள மனிதர்களில் உள்ள நம்பிக்கையில் அது வெளிப்படுகின்றது. ஒரு மனிதன் தன்னை மதித்தால், அது அவனைச் சுற்றியுள்ள மற்ற மனிதர்களை அவன் மதிப்பதில் வெளிப்படுகின்றது. ஒரு மனிதன் தன்னை நம்பவில்லையென்றால், அவன் மற்ற மனிதர்களையும் நம்புவதில்லை. இவ்வாறு தன்னையே நம்பாத மனிதன் தன் சூழ்நிலைகளை எதிர்மறையாக தகவமைக்கின்றான். இந்த எதிர்மறை தகவமைப்பு அவனுக்கு எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்துகின்றது. இன்றைய மனிதன் இவ்வளவு நாகரீகத்திலும் கலாச்சாரத்திலும் அத்தோடு அறிவியல் கண்டுபிடிப்புக்களிலும் உயர்ந்திருந்தாலும், இன்னும் தன் மகிழ்ச்சியை தேடிக் கொண்டு தான் இருக்கின்றான். இன்று இது ஒரு முக்கியமான சவாலாக இருக்கின்றது. மனிதன், தன் வாழ்வுக்குத் தேவையான அனைத்தையும் உருவாக்கிவிட்டான், ஆனால், தன் நிம்மதியை மட்டும் இழந்துவிட்டான். இதற்குக் காரணம் என்ன?

காரணம், இன்னும் அவன் தன் மனதில் கொண்டுள்ள 'எதிர்மறை நம்பிக்கை!' தன்னால் பல நல்லனவற்றை செய்ய முடியாது என்பதே அந்த எதிர்மறை நம்பிக்கையாகும். இதனால் மனிதன் தன்னை தோல்வியடைந்தவனாகவே நினைத்துக் கொண்டிருக்கின்றான். ஒரு மனிதன் தன்னைச் சுற்றி பலர் மிகவும் வெற்றியடைந்தவர்களாக இருக்க தான் மட்டும் வெற்றியைத் தேடிக் கொண்டிருப்பவனாக தன்னை நினைத்துக்கொள்வதும் இதற்கு முக்கிய காரணமாகும். இதில் முக்கியமாக கவனிக்க வேண்டியவை, வெற்றியடைந்த மனிதர்கள், தங்களை மட்டும் பார்க்கின்றார்களே தவிர தன்னைப் போன்று இருக்கும் பிறரைப் பற்றி கவலை கொள்வதே இல்லை. அதாவது, என்னை விட அவன் உயர்ந்துவிட்டானே, அவன் என்னை விட திறமையானவனாக இருக்கின்றானே, நான் அவனைப் போல இல்லையே, என்று நினைத்து தன்னைத் தானே குறைவாக மதிப்பிட்டுக்கொண்டு பல எதிர்மறை எண்ணங்களை தங்களுக்கென்று உருவாக்கிக்கொள்வதில்லை, மாறாக அவர்கள், தங்கள் தனித்தன்மையையும் அதற்கான திறமைகளையும் அடையாளம் கண்டுகொள்கின்றார்கள், அந்தத் திறமைகளை திறம்பட மேம்படுத்துகிறார்கள், அதன் மூலம் தங்களுக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கிக் கொள்கின்றார்கள். இதுவே அவர்களது வெற்றியின் அடிப்படைகளாக இருக்கின்றன. எனவே தான், "தீதும் நன்றும் பிறர் தர வாரா' என்று நம் முன்னோர் கணியன் பூங்குன்றனார் கூறினார். நம் வளர்ச்சியும் தளர்ச்சியும் நம் மனதில் தான் உள்ளன.

எனவே நம் மகிழ்ச்சியோ, துக்கமோ, வெற்றியோ, தோல்வியோ, நண்பர்களையோ, எதிரிகளையோ, எல்லாவற்றையும் நாமே தான் தீர்மானிக்கின்றோம். நம் உள்ளத்தில் நாம் கொண்டுள்ள எண்ணங்களே இத்தகைய தீர்மானமாக மாறுகின்றது. எனவே நம் உள்ளத்தை உற்று நோக்குவோம். அந்த உள்ளத்தில் நாம் எத்தகைய எண்ணங்கள விதைக்கின்றோம் என்பதை சற்று கவனத்தில் கொள்வோம். நம் உள்ளம் நேர்மறையான எண்ணங்களோடு மட்டும் நிறைந்திருக்க முயற்சி செய்வோம். அந்த உள்ளத்தின், அதாவது, நம் அகத்தின் அழகையே நம் முகமும் வாழ்க்கையும் பிரதிபலிக்கின்றன. எனவே, "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல், மற்றவை தள்ளினும் தள்ளாமை நீர்த்து' என்ற வள்ளுவர் கூற்றுக்கிணங்க நல்லவற்றை சிந்திப்போம், உயர்வானவற்றை திட்டமிடுவோம், நலமாக வாழ்வோம்!

நன்றி.

## இறைஆசீர் காணவே ...

நல்லதைப் புரிந்து கொண்டு
நாமதைத் தெரிவோம் வாழ்வில்
பொய்களைப் புரட்டுக்களை
புறந்தள்ளி விட்டே
உண்மையின் வழிகளை மறவாமலே
உயர்வினைக் காணத் தொடர்வோமே

சீரற்ற வழிகளினால்
சிதைந்துவிடும் நம்வாழ்வு ஆனால்
பார் போற்றும் நிலைகளைக் காண
பல துன்ப வழிகளைக் கடக்க வேண்டும்
என்னதான் கடினங்கள் வந்தாலும் வாழ்வில்
எதையும் தாங்கும் இதயத்தோடு வாழ்வோமே

மனிதங்கள் மனங்களிலே
மாண்படையும் போது
பிறரன்பு உதவும் மன உணர்வுகள்
பெரிதாகி நம்வாழ்விலே
சிறந்த நிலைகளைத் தோற்றுவிக்க
நலமே காண்போம் நம் வாழ்வில்

துன்புறுவோர் வாழ்வினிலே
துயர்களை உணர்ந்து கொண்டு
நம் துயராய் அவைகளை
நாமுணர்ந்து கொண்டே பிறர்
துன்பங்களை நீக்கத் துணை புரியும்போது
இறைவனின் ஆசீர் நம்மோடு சேருமே


அருட்பணி என்.சி. அருள்வரதன்

## படித்ததில் பிடித்தது

அருட்பணி. T. கிங்ஸ்லி றொபட்

மிகப் பெரிய துறவி அவர்.
திருக்காட்சி பெற்றவர்.
துணிகள் தைத்து பிழைத்து வந்தார்.

மன நிம்மதியைத் தொலைத்த பேரரசர்
ஒருவர் அவரைச் சந்தித்தார்.
அவரது ஞானம் மிக்க
வார்த்தைகளைக் கேட்டார்.
நிம்மதி அருள் பெற்றார்.



விட்டுப்பிரியும் நேரம் வந்தது.
பேரரசர் பரிசு தர விரும்பினார்.
வைரக்கற்கள் பதித்த
தங்கக் கத்திரிக்கோல் ஒன்றைப்
பரிசாகத் தந்தார்.
அது துறவியின் தொழிலுக்கு உதவும்
என்று எண்ணினார்.

"இதை என் நினைவாக
வைத்துக்கொள்ளுங்கள்."

துறவி வாங்க மறுத்துவிட்டார்.
முகம் வாடினார் பேரரசர்.



"தங்களுக்கு என்ன பரிசு தந்தால்
உதவும்?"

"ஒரு ஊசி இருந்தால் கொடுங்கள்,
போதும்...!"

அரசர் கேட்டார்:
"கத்திரிக்கோலை மறுத்து
ஏன் ஊசி வேண்டும் என்கிறீர்?"

துறவி சொன்னார்:
"கத்திரிக்கோல் வெட்டும், பிரிக்கும்.
ஊசி தைக்கும், இணைக்கும்."

**ஒட்டுபவரை விட வெட்டுபவரே அதிகம்.**

**"உன் செபம் இறைவனிடம் பறந்துசெல்ல வேண்டுமெனில் அதற்கு நோன்பு, தானம் ஆகிய இரு சிறகுகள் தேவை."**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித யோவான் நற்செய்தி
# அதிகாரம் 4 - 6

1. சிக்கார் என்னும் ஊர் எங்கே இருந்தது. அங்கு என்ன இருந்தது?

விடை :..........................................................................

2. சமாரியப்பெண் இயேசுவைப் பார்த்து யாரெனக் கூறினார்?

விடை :..........................................................................

3. "இவர்கள் உண்பதற்கு நாம் எங்கிருந்து அப்பம் வாங்கலாம்" என இயேசு யாரிடம் கேட்டார்?

விடை :..........................................................................

4. மக்கள் எதனால் தன்னைத் தேடினார்கள் என்று இயேசு கூறினார்?

விடை :..........................................................................

5. "விதைப்பவர் ஒருவர். அறுவடை செய்பவர் வேறொருவர்" என்னும் இயேசுவின் முதுமொழியின் படி சீடர்கள் எதைச் செய்தார்கள்?

விடை :..........................................................................

6. இயேசு யாருடைய திருவிழாவிற்கு எருசலேம் சென்றார்?

விடை :..........................................................................

7. "எழுந்து உம்முடைய படுக்கையை எடுத்துக் கொண்டு நடந்து செல்லும்" என்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

விடை :..........................................................................

8. யோவான் பகிர்ந்த சான்றை விட மேலான சான்று என்று இயேசு எதைச் சொல்கிறார்?

விடை :..........................................................................

9. இயேசு ஐந்து வாற்கோதுமை அப்பங்களையும் இரண்டு மீன்களையும் பெருகச் செய்த அரும் அடையாளத்தைக் கண்ட மக்கள் என்ன கூறினார்கள்?

விடை :..........................................................................

10. மானிட மகனுடைய ......................... உண்டு. அவருடைய ......................... குடித்தாலொழிய நீங்கள் ......................... அடையமாட்டீர்கள் . கீறிட்ட இடம் குறிக்கும் சொற்கள்?

விடை :..........................................................................

11. "ஆண்டவரே நாங்கள் யாரிடம் போவோம். நிலைவாழ்வு அளிக்கும் வார்த்தைகள் உம்மிடம் தானே உள்ளன". என்று யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

விடை :..........................................................................

12. "எம் தந்தை யாக்கோபை விட நீர் பெரியவரோ" என்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

விடை :..........................................................................

13. கிறிஸ்து எனப்படும் ......................... வருவார் என எனக்குத் தெரியும். அவர் வரும்போது ......................... எங்களுக்கு அறிவிப்பார். கீறிட்ட இடம் குறிக்கும் சொற்கள்?

விடை :..........................................................................

14. நல்லன செய்தோர் ......................... உயிர்த்தெழுவர். தீயன செய்தோர் ......................... பெற உயிர்த்தெழுவர். கீறிட்ட இடம் குறிக்கும் சொற்கள்?

விடை :..........................................................................

15. இயேசு செய்த இரண்டாவது அரும் அடையாளம் எது?

விடை :..........................................................................

பெயர் : ..........................................................

பங்கு : ..........................................................

முகவரி : ..........................................................

முடிவுத்திகதி : 31 . 09. 2020

## சிறப்புப் போட்டி
## இறைவார்த்தைப் புதையல் போட்டி முடிவுகள்
## [ புனித லூக்கா நற்செய்தி]



பங்குபற்றியவர்கள் : 103 பேர்

மிகச்ச ரியாக விடையளித்தோர் : 60 பேர்

பரிசுக்குரியவர்கள்

**1ம் பரிசு 500/- ரூபாய்**
ரூபன் சிறியாணி
சகாயபுரம்
மூதூர்

**2ம் பரிசு 300/- ரூபாய்**
ஆர். அன்றூஷன்
இருதயபுரம் ,
மூதூர்

**3ம் பரிசு 200/- ரூபாய்**
வி. பிலிப்
இல 109/5, நடராஜன் வீதி
இலிங்கநகர்

## கண்டுபிடித்தல் போட்டி – போட்டி முடிவுகள்
### (திருவழிபாடு சம்மந்தப்பட்ட சொற்கள்)

பரிசுக்குரியவர்கள்


பங்குபற்றியவர்கள் : 98 பேர்

மிகச்ச ரியாக விடையளித்தோர் : 08 பேர்

**1ம் பரிசு 500/- ரூபாய்**
கே. கிறிஸ். யஸ்வின்
இல 51/1, அந்தோனியார் வீதி,
நித்தியபுரி



**2ம் பரிசு 300/- ரூபாய்**
ச. ஏஞ்சல்
இல 49, அந்தோனியர் வீதி,
பாலையூற்று



**3ம் பரிசு 200/- ரூபாய்**
காமலிற்றா விமலதாஸ்
இல 31, இராஜவரோதயம் வீதி,
திருகோணமலை

## சிறுவர்களுக்கான போட்டி
### வித்தியாசங்களைக் கண்டுபிடித்தலும் நிறந்தீட்டலும்

**1ம் பரிசு 500/- ரூபாய்**
கோகுல் அபிஷா
5ம் வட்டாரம்
கும்புறுப்பிட்டி

**2ம் பரிசு 300/- ரூபாய்**
லீ. புமேஷயன்
இக்பால் வீதி,
மூதூர் – 07

**3ம் பரிசு 200/- ரூபாய்**
செல்வி ரியோனா றொஜிலியா
இல : 52, பாத்திமா வீதி,
திருகோணமலை



ஆர்வமுடன் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றியும் பாராட்டுக்களும்!

**கவிதை வரிகளை**
**சரியாக வடிவமையுங்கள்**

போட்டியில் எல்லோரும் பங்கு கொள்ளலாம்

முதலாம் இடம் 500/-
இரண்டாம் இடம் 300/-
மூன்றாம் இடம் 200/-

### நன்மைகளைக் காண்போம்

**இதோ கவிதை வரிகள்**

- நன்மையின் வழிகளோ கடினமானவையே
- தீமையின் பாதைகள் இலகுவானவைதான்
- பாவங்கள் நம்மைப் பற்றிக்கொள்ளுமே
- நடந்து செல்லும்போது
- நன்மைகளை நாம் மறந்து
- இடங்கொடுக்க வேண்டாமே
- கொடுமைகள் தொடர்ந்து வர
- வெற்றியின் கனிகளை சுவைப்பது உண்மையே
- முன்னேறிச் செல்லும் போது நாம்
- முன்வைத்த காலைப் பின்வைக்காமல்
- நன்மையின் பாதைகள் கடினமாயினும்
- நாமதை மறக்காமல் தொடர வேண்டும்
- இடர்களோ இன்னல்களோ எது வந்தாலும்

**இப்போது கவிதை வரிகளை சரியாக வடிவமையுங்கள்**

## நற்கனி மரம்

**Fr. NC**



ஒரு கிராமம். அக்கிராமத்திலே உள்ள குடும்பங்களிலே ஒரு குடும்பத்திலே கணவன், மனைவி, இரண்டு பெண்பிள்ளைகள். கணவன், மனைவி, பிள்ளைகளுக்கிடையே ஒருநிலையான அன்பு. கணவன் தன் மனைவி, பிள்ளைகளுடன் அந்த அளவிற்கு அன்பாக இருந்தார். அதேபோன்று மனைவியும் தன்கணவன் பிள்ளைகளோடு நிறைந்த அன்போடு இருந்தார். பிள்ளைகள் இருவரும் அதேவிதமாக பெற்றோரோடும் மற்றவர்களோடும் அன்பை வெளிக்காட்டிக் கொண்டிருந்தார்கள். சொல்வார்கள் மரம் சரியாக இருந்தால் கனிகளும் சரியாக இருக்குமென்று. இக்குடும்பத்திலே இதுவெளிப்படையாகத் தெரிகின்றதல்லவா!

## குறுங்கதைப் போட்டி – 01
### அம்மம்மாவின் கோழிக்குஞ்சு



1ம் இடம் – **2500/-**
திருமதி. தெல்மா
புனித யூதாததேயு ஆலயம்,
இல 993/3, இலிங்கநகர்

2ம் இடம் – **1500/-**
திருமதி. மதுரா கெனடி
புனித மரியாள் பேராலயம்,
இல 15/12, திருகோணமலை



3ம் இடம் – **1000/-**
செல்வி. **P.** கொன்சலா
குழந்தை இயேசு ஆலயம்,
இல 125, உட்துறைமுக வீதி,
திருகோணமலை

"கடந்த காலம் இல்லாத புனிதனும் இல்லை, எதிர்காலம் இல்லாத பாவியும் இல்லை."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களுக்கான போட்டி



படத்திலுள்ள 06 வித்தியாசங்களை கண்டுபிடித்தலும் நிறம் தீட்டலும்





- பாலர் முதல் தரம் 5 வரையுள்ள மறைக்கல்வி மாணவர்களுக்கு.
- திருமலைத்தீபத்தில் தரப்படும் படம் 01 இற்கு மாத்திரம் நிறந்தீட்டி வித்தியாசங்களைக் கண்டுபிடித்து படத்திலேயே குறிக்க வேண்டும்.
- போட்டோ பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- 1, 2,3ம் இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும்

1ம் பரிசு - 500/- 2ம் பரிசு 300/- 3ம் பரிசு 200/-

பெயர் :..........................................

பங்கு :..........................................

முகவரி :..........................................

தரம் :..........................................

முடிவுத்திகதி : 31.09.2020

# விடுபட்ட எழுத்துப்புதிர் போட்டி - 36

## 1 திமொத்தேயு 1 - 3 அதிகாரங்கள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | தி | ■ | ■ | உ |
| ■ | க | | | | | | | ■ | |
| ■ | ■ | | | ■ | | | | | |
| ப | ■ | | | ந | | | | | |
| | ■ | | | | | | | | |
| | | | | | வி | | ந | | ■ |
| | | | தூ | | ■ | | ■ | ம | ■ |
| ■ | | இ | ■ | | ■ | | | | பொ |
| ■ | | ■ | | | | | நி | ■ | ■ |
| ■ | க | ■ | | | | | | | ம |

1. வி..........வா........ம் (1:5)
2. திரு.........சட்......ம் (1:8)
3. ந .......... .........ய்தி (1:11)
4. இ............ங்............னா......... (1:13)
5. நி .......... வா.............வை (1:16)
6. மன் ..........டுங்..........ள் (2:1)
7. உ .......... ..............த்தி (2:8)
8. ப ............ ............... டு (2:11)
9. தூ ......... ................ழ்வு (2:15)
10. பொறு ..............டை (3:1)
11. கவ ...........க் ............ (3:5)
12. தி ............ச்......டை..............ல் (3:6)
13. நற் ..........ன்று (3:7)
14. க ............. ணி .........ம் (3:8)
15. ம ............ உ.............மை (3:16)

பெயர் : ..........................................


பங்கு : ..........................................

முகவரி : ..........................................

முடிவுத்திகதி : 31.09.2020

## தெரிந்து கொள்வோம்

- கஷ்டப்பட்டு உழைத்தால் ஜெயிக்க முடியாது இஷ்டப்பட்டு உழைத்தால் தான் ஜெயிக்கமுடியும்
- நம்மை மற்றோர் நேசிக்க வேண்டுமானால் நாம் மற்றவரை நேசிக்க வேண்டும்
- இறப்பதற்கு பிறந்த நீ இறக்கும் வரையில் ஏன் இரக்கமாக இருக்கக்கூடாது?
- அழகானவை எல்லாம் அரிதானவையல்ல அரிதானவை எல்லாம் அழகானவை
- காலத்தின் மதிப்பு உண்டு என தெரிந்தால் வாழ்வின் மதிப்பு உனக்கு தெரியாது
- பாவியை அழிக்கலாகாது பாவத்தையே அழிக்க வேண்டும்
- வாழ்வில் வந்து போகும் துன்பங்கள் அனைத்தும் வாழ்கையில் வழிகாட்டியே



மரியதாஸ் C. ஜெபர்ஷன்
பாலையூற்று

## தவறுக்கு வருந்துகிறோம்

"நல்வாழ்வு காணவே" என்ற போட்டிக் கவிதை தவறுதலாக ஆவணி மாத திருமலைத்தீபத்தில் வெளியானதால் அப்போட்டி கைவிடப்படுகின்றது என்பதனை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

"உனக்கு மரணமே இல்லை என்பது போல் உன் உடலைக் கவனி, உனக்கு நாளையே மரணம் என்பதுபோல் உன் ஆன்மாவைப் பேணிக்காத்துக்கொள்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பில்லிசூனியத்திற்கு எதிரான முதல் உலக நாள்



ஆவணி 10 பில்லிசூனிய வன்முறைகளுக்கு எதிரான முதல் உலக நாள் கடைப்பிடிக்கப் பட்டது. அதன் நிமித்தம் அறிக்கை வெளியிட்ட பப்புவா நியு கினி நாட்டின் மெண்டி மறைமாவட்ட ஆயர் டொனால்ட் லிப்பேட் (Donald Lippert) அவர்கள் பில்லி சூனியத்தை ஒரு காரணமாகக் காட்டி வன்முறைகளில் ஈடுபடுகிறவர்கள் மனித சமுதாயத்திற்கு எதிராகக் குற்றம் புரிகிறவர்கள் என்றார். அந்நாட்டில் அரச தண்டனைக்குரிய குற்றமாக இது காணப்பட்டாலும் இன்னும் இதுபோன்ற மூடச்செயல்களில் நம்பிக்கை வைத்து குறிப்பாக பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இன்னும் குறையவேயில்லை என தம் வருத்தத்தையும் ஆயர் அவர்கள் பதிவு செய்தார்.


பப்புவா நியு கினி நாட்டில் இத்தகைய வன்முறைகள் வீடுகளிலும் வெளியிலும் தொடர்ந்து அதிகரித்து வருவதை ஆயர் அவர்கள் சுட்டிக்காட்டிய அதேவேளை அங்கு பணிபுரியும் அருட்சகோதரி ஒருவர் உயிர்ப்பு ஞாயிறன்று ஒரு முதியவரின் மரணத்தைக் காரணம் காட்டி பில்லிசூனியத்தின் அடிப்படையில் மூன்று பெண்கள் சித்திரவதை செய்து எரித்துக் கொல்லப்பட்டதை செய்தி ஊடகமொன்றிற்கு வருத்தத்துடன் பகிர்ந்துகொண்டார். எம் நாட்டிலும் படித்தவர்கள் மத்தியிலும் இப்பில்லிசூனிய நம்பிக்கைகள் இன்னும் காணப் பட்டாலும் அது பாரிய உடல்ரீதியான வன்முறைகளுக்கு இட்டுச்செல்லவில்லை என்பது ஓர் ஆறுதல். ஆனாலும் உளவியல் பாதிப்புக்களையும், பாரிய வாழ்வியல் பின்னடைவுகளையும், பொருளாதார இழப்புக்களையும் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் இம்மூடநம்பிக்கை ஏற்படுத்தி வருகிறது என்பது இங்கே வருத்தத்துடன் பதிவு செய்யப்படவேண்டியதொன்றாகும்.


**மூதூர் திரு. சவரிமுத்து பண்டிதர் அவர்களின்**
**நினைவாக குடும்பத்தினரின் அனுசரணையில்**
**நடாத்தப்படும் தீபத்தின் படைப்பாளிகளுக்கான தேடல்**

படத்தைப் பாருங்கள்!

வார்த்தைகளில் வடியுங்கள்!

பரிசை வெல்லுங்கள்!



31.09.2020க்கு முன்

படத்தோடு அனுப்புங்கள்!

பரிசை வெல்லுங்கள்!

**உங்கள் உள்ளங்களில் எழும் எண்ணங்களை வார்த்தைகளாக்கி**
**15 சொற்களுக்கு மேற்படாமல் எழுதுங்கள்**
**குறைந்த வார்த்தைகளில் செறிந்த பொருள்தரும்**
**முதல் 10 திறமைசாலிகளுக்கு தலா ரூபா 500 பரிசு**


## திருகோணமலையில் சுதேச குருக்கள் துறவியர் தினம்





2020ம் ஆண்டு சுதேச குருக்கள் தினமானது “இறை அழைப்பை மகிழ்ந்து கொண்டாடுவோம்” எனும் கருப்பொருளில் கடந்த ஆடி மாதம் 26ம் திகதியன்று ஞாயிற்றுக்கிழமை திருப்பலியில் அனைத்து பங்குகளிலும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் சிறார்கள், ஊக்குனர்கள் ஒன்று சேர்ந்து குருக்கள், துறவியர்களுக்காக விசேட விதமாக செபித்து அவர்களை வாழ்த்தினர். அன்றைய நாளில் எமது மறைமாவட்ட இயக்குனர் அருட்தந்தை X.I. றஜீவ அடிகளார் கன்னியா, மூதூர் மற்றும் நிலாவெளிப் பங்கு சிறார்கள், ஊக்குனர்களை சென்று தரிசித்து கலந்துரையாடினார்.

## திருமலை, புனித மரியாள் பேராலய வருடாந்தத் திருவிழா 2020



திருகோணமலை மறைமாவட்டத்தின் புனித மரியாள் பேராலய வருடாந்தத் திருவிழாவானது 06.08.2020 அன்று பங்குத்தந்தை அருட்பணி. போல் றொபின்சன் அடிகளார் தலைமையிலான கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. ஒன்பது நவநாட்கள் சிறப்பிக்கப்பட்டு அன்னை மரியாள் விண்ணிற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திருநாளான ஆவணி 15, 2020 அன்று ஆயர் பேரருட்திரு கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை தலைமையிலான கூட்டுத்திருப்பலியுடன் இனிதே நிறைவேறியது.

## திருத்தந்தையின் டுவிட்டர் பக்கம் @pontifex



நவீன ஊடகங்களை நற்செய்தி அறிவிப்புப் பணியில் வினைத்திறனுடன் பாவிப்பதில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனைத்துப் பணியாளர்களுக்கும் ஓர் எடுத்துக்காட்டு என்றே சொல்லலாம். அவரது டுவிட்டர் கணக்கில் ஆங்கில மொழி மூலமான பதிவுகளை பின்தொடர்வோர் மாத்திரம் ஒரு கோடியே 84 இலட்சம். 12-12-12 என்ற சிறப்பான எண்கள் கொண்ட 2012ம் ஆண்டு மார்கழி 12ம் திகதி அப்போதைய திருத்தந்தையாகப் பணியாற்றிய 16ம் பெனடிக்ட் அவர்களால் திருத்தந்தைக்கான பிரத்தியேக டுவிட்டர் செய்திகள் தொடங்கப்பட்டது.

“பாலம் அமைப்பவர்” என்ற பொருள்படும் pontifex என்ற இலத்தீன் சொல்லை தன் டுவிட்டர் முகவரியாகக் கொண்டு முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் தம் டுவிட்டர் செய்திகளை வெளியிட்டார்.

ஒவ்வொருநாளும், @pontifex என்ற வலைத்தள முகவரியில் திருத்தந்தை பிரான்சிஸ் வழங்கி வரும் டுவிட்டர் செய்திகள் இத்தாலியம், ஆங்கிலம், பிரெஞ்சு, ஸ்பானியம், போர்த்துக்கீசியம், ஜேர்மன், போலந்து, இலத்தீன் மற்றும் அரேபியம் ஆகிய 09 மொழிகளில் வெளியாகின்றன.

**“இந்த உலகை முழந்தாள்படியிட வைத்துவிட்ட நுண்ணிய கிருமியிலிருந்து குணமடையும் வழியைக் கண்டுபிடிக்க வேண்டும். அதேவேளை, சமுதாய அநீதி என்ற பெரும் கிருமியிலிருந்தும் நாம் குணம்பெற வேண்டும்.”**

Pope Francis @pontifex

## மூதூர், புனித அந்தோனியார் ஆலய திருவிழா 2020



மூதூர், புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா 31.07.2020 வெள்ளிக்கிழமையன்று பங்குத்தந்தை A. செபஸ்டியான் OFM அடிகள் தலைமையிலான கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 02.08.2020 அன்று அமலமரித்தியாகிகள் சபையின் யாழ்மாகாண முதல்வர் அருட்பணி. பெனடிக்ற் யூஜின் OMI அடிகளார் தலைமையிலான கூட்டுத் திருப்பலியுடன் திருவிழா இனிதே நிறைவுற்றது. உதவிப்பங்குத்தந்தை பிரேமானந் OFM அடிகள் மற்றும் மக்கள் அனைவருக்கும் எமது வாழ்த்துக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org